# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



## சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 2014

# வட இலங்கை பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம்

பேருரை வழங்குநர் : பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராஜா
வரலாற்றுத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

13.11.2014

# சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரை

## வட இலங்கைப் பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

290273

பேராசிரியர். செல்லையா கிருஸ்ணராஜா
வரலாற்றுத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

290273

Donated by
Arulanantham Srikanthaluxm
Former Librarian
University of Jaffna



லீலாவதி இராமநாதன் பெருமாட்டி
LADY LILAVATI RAMANATHAN

## சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை

ஆண்டுதோறும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வருடாந்த பட்டமளிப்பு விழாவின் பின்னர் நடாத்தப்பட்டு வருகின்றது. இது சேர்.பொன் இராமநாதன் மற்றும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களை நினைவுகூரும் வகையிலும் அவர்களின் அளப்பரிய சேவையினை பரமேஸ்வரக் கல்லூரி பல்கலைக்கழகமானது பற்றியும் நன்றி கூறும் வகையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் இந்த நினைவுப் பேருரையினை பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா அவர்கள் ஆற்றவுள்ளார். பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா அவர்கள் 'வடஇலங்கை பண்பாட்டுத் தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம்' எனும் தலைப்பில் தனது நினைவுப் பேருரையினை ஆற்றவுள்ளார். வட இலங்கை மக்களின் பண்பாடு ஆய்வு மூலம் நிலைநிறுத்திப்படுவது மிகவும் அவசியமான தொன்றாகும். அந்த வகையில் தொல் பொருள் ஆராய்ச்சி இவற்றிற்கு சான்றுபகர்க்கும். எனவே இந்த தலைப்பினை பேராசிரியர் கிருஷ்ணராசா அவர்கள் தெரிவுசெய்து அதனை ஆவணப்படுத்துவது பொருத்தமான தொன்றாகும்.

இந்த நினைவுப் பேருரையினை ஆக்க ஒப்புதல் தந்து அதனை ஆற்றவிருக்கும் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

‘‘சைவத்தமிழ்ப் பண்பாட்டின் நிலைபேற்றுக்கின்றியமையாத தாய்மை இயல்பின் தூய்மை விளங்கப் பல்லாண்டுகளாக நம்மிடையே திகழ்பவர் திருமதி லீலாவதி இராமநாதன் அவர்கள்’’ எனப் பொருத்தமாக பண்டிதர் மு.கந்தையா தனது உரையொன்றின் போது குறிப்பிட்டிருந்தார். சேர் பொன் இராமநாதன் அவர்களால் 1924 ஆம் ஆண்டிலே சைவமங்கையர் சபை நிறுவப்பட்ட காலத்திலிருந்து அச்சபையை நிர்வகிக்கும் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருந்தது முதல் 1952 ஆம் ஆண்டில் இயற்கை எய்தும் வரைக்கும் உள்ள 28 வருட காலங்களாக சைவத்திற்கும் தமிழ் மொழிக்கும் அவர் தொண்டாற்றியிருந்தார். 1930 இல் அவரது கணவர் அமரத்துவநிலையடைந்த காலத்திலிருந்து ஏறத்தாழ இரண்டு தசாப்தகாலம் அவர் சைவ மக்களுக்கு சமய நற்பணிபுரிந்து, தன்னை ஓர் இந்துப் பெண்ணாகவே மாற்றிவிட்டிருந்தார்.

‘‘சேர் பொன் இராமநாதனின் சேவைகளுக்கும் இலட்சியங்களுக்கும் உறுதுணையாக வாழ்ந்தவர் பெருமாட்டி லீலாவதி அம்மையார்’’. இராமநாதன் இறந்ததிற்குப் பின்னரும் அவரது இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகவும், யாழ்பாணத்திலே சைவத்தமிழ்ப் பண்பாட்டினைப் போற்றி வளர்ப்பதற்காகவும் அரும்பாடுபட்டவர் பெருமாட்டி லீலாவதி அம்மையார் அவர்கள். யாழ்ப்பாணத்திலே இராமநாதன் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவி, சைவத்தமிழ்ப் பண்பாட்டின் உயர் நிலைகளாக விளங்குவதற்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து வந்தார். சைவ மங்கையர் வாழ்விற்கு எடுத்துக்காட்டாகக் கூறத்தக்க வகையில் வாழ்ந்து வந்த பெருமாட்டி லீலாவதி அம்மையார் பல ஆய்வு நூல்களையும், தொகுப்பு நூல்களையும் எழுதி வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தனது கணவர் மறைந்த பின்னரும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வந்த அம்மையர் அவர்கள் வான்மீகி இராமாயணத்தின் பொருளை ஆங்கிலத்தில் அழகுற எழுதி நூலாக்கிய பெருமையையும் பெற்றுக் கொண்டிருந்தார்.

பெருமாட்டி லீலாவதி இராமநாதன் பெற்றிருந்த சமுதாய மதிப்பிற்குரிய உயர் நிலையையும், மேம்பாட்டையும் கண்ட இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்குச் சட்ட கலாநிதி [Doctor of Laws] எனும் கௌரவ விருதினை வழங்கி, அவரது சமூக – சமயப்பணிகளை மேலும்

ஊக்குவித்தது. அவற்றுக்கெல்லாம் வித்தாரமாக அமைந்தது சைவமங்கையர் சபையில் அம்மையாருக்கிருந்த ஈடுபாடேயாகும். அம்மையாரது தமிழ் பண்பாட்டு மரபுச்சிந்தனையில் துளிர்விட்டிருந்த ஓரம்சமாகவே வடஇலங்கைப் பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம் '' என்னும் பொருளில் இன்றைய இந்நாளில் திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரையை இந்த மண்டபத்தில் இரண்டாவது தடவையாகவும் நிகழ்த்ததுவதற்கு இறையருள் கிடைத்திருப்பதனையிட்டு பார்வதி சமேத பரமேஸ்வரரின் பாதங்களைப்பணிந்து, இந்நினைவுப்பேருரையை நிகழ்த்துவதற்கு எனது பெயரை சிபார்சு செய்து, அதற்குரிய அங்கீகாரத்தினையும் பெற்றுத்தந்த வரலாற்றுத்துறைத்தலைவருக்கும், அங்கீகாரம் வழங்கிய பட்டமளிப்பு விழாக் குழுவினருக்கும் மிகுந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொண்டு, நான் எனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை ஆற்றத் துணிகின்றேன். மிகக் குறுகிய-காலநேரப் பரப்பிற்குள் இந்நினைவுப்பேருரைக்கான கட்டமைப்பினை உருவாக்கவேண்டியிருந்த ஒரே காரணத்தினால் சொற்பிழைகள் , கருத்துப்பிழைகள் இடம்பெறுவதும் தவிர்க்கமுடியாததாக அமையும் என்ற காரணித்தினால் குற்றங்கண்டவற்றை பொறுத்து, எனது நினைவுரையை நிறைவு செய்வதற்கு பொறுமையுடன் செவிமடுத்து உதவுமாறும் சிரம் தாழ்த்தி, தாழ்மையுடன் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் அவர்களே!,
உபவேந்தர் அவர்களே!,
பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களே!,
கௌரவத்திற்குரிய பேரவை உறுப்பினர்களே!,
மூதவை அங்கத்தவர்களே!,
எமது பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள் அவர்களே!
பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவமணிகள்,
மற்றும் சைவமங்கையர்கழக உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், ஆர்வலர்கள்
உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கங்கள் உரித்தாகட்டும்.

## வடஇலங்கைப்பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒருவிளக்கம்.

### பிரச்சினைக்கான அறிமுகம்

பிராந்தியப் பண்பாட்டு ஆவணமாக்கல் மையங்களின் ஒருமையப்படுத்தப்பட்ட சந்திப்பின் திரட்சியாகவே ஒரு தேசத்தின் தேசிய வரலாறு உருவாக்கம்பெறும். ஒரு தனிமனிதனின் சாதனைகளோ அல்லது ஒரு தனித்த சமூகத்தின் இயங்கியல் முறையோ பல்லின - மத, மக்கள் வாழும் நாட்டின் வரலாறாகாது. ஒருவேளை அவை அந்நாட்டின் ஒரு குறிப்பிட்ட காலகட்ட சமூக இயக்க நெறிமுறைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தி நின்றிருந்தாலும், அவை அந்நாட்டின் முழுமையான வரலாற்றுப் போக்கினைப் பாதித்தவையாகமாட்டா. இலங்கைத் தீவின் பண்பாட்டுத் தளத்தின் பரிணாம வளர்ச்சியை நோக்கும்போதும் இதே பண்புகளைக் காணமுடிகிறது. பல்லின, பன்மத நோக்கில் அமைந்த வரலாற்று எழுத்தியலோடு இணைந்த பண்பாட்டு அணுகுமுறைக்கு இன்னும் இத்தீவின் வரலாற்றினை எழுதுவதற்கு தொல்லியலாளர்களோ மற்றும் பண்பாட்டு வரலாற்றாசிரியர்கள் எவருமே தயாராகவில்லை என்பதனையே அண்மைக்கால கருத்துத் தொடர்பு மற்றும் இலத்திரனியல் சாதனங்களுடாக வெளிவரும் இலங்கைப் பண்பாட்டு வரலாறு பற்றிய கட்டுரைகளும், ஆய்வுக் கருத்துக்களும், இனங்கள், மொழிகள் பற்றிய அணுகு முறைகளும் நிருபித்துள்ளன.1

மேலே குறிப்பிடப்பட்டவாறான ஒரு பொதுமையான வரலாற்றுக் கோவையை உருவாக்கிக் கொள்வதற்கு ஏற்றத்தாழ்வற்ற வகையிலான பிராந்தியப் பண்பாட்டுக் கூறுகளின் பங்களிப்பினை, ஏற்றவகையில் பண்பாட்டு வரலாற்று முறையியல் ஊடாக அளவீடு செய்ய வேண்டிய கட்டாய நிலை பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்மட்ட ஆய்வு நிறுவனங்களுக்குரியதாக பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியப்பண்பாட்டினைப் பாதுகாக்கவென இரவீந்திரநாத் தாகூரினால் சாந்திநிகேதனில் விஸ்வபாரதிப் பல்கலைக்கழகத்தினை ஸ்தாபித்திருந்தமை போன்றே வடஇலங்கையில் தமிழ்மொழி, சமயம், நாட்டார் மரபுகள் மற்றும் கலைகள் போன்றவற்றை அழிவுநிலையிலிருந்து மீட்கவும் அவற்றை வளர்த்தெடுக்கவுமே Sir

பொன் இராமநாதனின் பண்பாட்டுச் சொத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் எம்முன்னோரால் கட்டியெழுப்பப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் அது அமைந்துள்ள பிராந்தியத்தில் இப்பொழுது எத்தகைய பண்பாட்டுப்பணிகளை முன்னெடுத்து வருகின்றது என்ற வினாவினை எமக்குள்ளே சிந்தித்துப்பார்த்தோமானால் நிச்சயமாக அது எதிர்மறையான விடையையே உடனடியாகப் பெற்றுத்தரும் என்பதனை நான்கூறித்தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. எமது சமூகத்தின் உயர்நிலைப்பட்ட அறிவியல் ஈட்டத்திற்கும் வாழ்க்கைத்தரத்திற்கும் அப்பல்கலைக்கழகம் வழங்கிவரும் பங்களிப்புக்கள், மற்றும் ஒன்றிணைந்த சமூக ஒருமைப்பாட்டுச்சிந்தனைக்கு இப்பல்கலைக்கழகம் ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றுவதற்கான பன்மைப்பண்பாட்டுச் சூழல், அவை ஒத்திசைவானமுறையில் அணுகப்படுகின்றதா அல்லது வேரறுக்கப்படுகின்றதா என்பன போன்ற வினாக்கள் இப்பல்கலைக்கழகத்தினூடாக எமது பண்பாட்டினை பாதுகாக்க எந்தளவிற்கு சாத்தியப்பாடாகும் என்பதனை அளவீடு செய்யும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களின் பண்பாட்டு வேர்கள் மற்றும் மூலங்கள் மிகவும் லாவகமான முறையில் ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலின் பின்னணியில் சக்தி மிக்க ஒரு சாராரால் துவம்சம் செய்யப்பட்டு வருவது எல்லோரும் அறிந்த ஒரு விடயமாக இருந்தும், அறிவுஜீவிகளாகிய நாம் அவ்விடயம் தொடர்பாக மௌனித்ததற்கான காரணங்களை புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது.

பிரித்தானிய கல்வி-முகாமைத்துவ நோக்கில் அமைந்த ஓர் அணுகுமுறைக்குப் பழக்கப்பட்ட நிலையே இங்கு இப்பொழுதும் தொடர்ந்து கொண்டு இருப்பதனால் ஒரு சமூகக்குழுமத்தினரின் பண்பாட்டு அடித்தளம் தகர்க்கப்படுவதனைக் கண்டும் காணாதிருக்கின்றோம். பிரித்தானியர் காலத்தில் உருவாக்கப்பட்ட இலங்கையின் சமூக - பண்பாட்டு வரலாற்று எழுத்தியலில் இன ஒதுக்கல் நோக்கு என்பது மிக மிக இறுக்கமாக அமைந்துள்ள தன்மையினால் இங்கு பிராந்தியப் பண்பாட்டு சமூக வரலாற்று நோக்கு நிலைகள் உருவாகாதொழிந்தன. இதுவே இற்றைவரைக்கும் இங்கு பிராந்தியங்களின் பன்மைப் பண்பாட்டு வரலாறு உருவாகாமல் தடைப்பட்டிருந்தமைக்கான காரணமுமாகும்.2

பிரதேச மட்ட பண்பாட்டு வரலாற்றுக் கட்டமைப்பு

இலங்கையின் கரையோரப் பிராந்தியங்களிலுள்ள பண்பாட்டு உருவாக்கலில் இணைந்திருந்தோரது வரன்முறைநிகழ்வுகள் எவ்விதத்திலேனும் மையப்பகுதியிலுள்ள தலைநகர வரலாற்றுடன் கி.பி. 15ஆம் நூற்றாண்டுவரைக்கும் இணைக்கப்பட்டுக் காட்டப்பட்டிருக்கவில்லை. அதற்கு இன்னொரு அடிப்படைக்காரணியாக அமைந்த சமூகக்குழும நிலமை இலங்கையின் கரையோரங்கள் முழுவதுமாக இந்துமத வேர்களைக் கொண்டிருந்தமை ஆகும். இலங்கையின் கரையோர மாகாணங்கள் அல்லது பிரதேசங்கள் பற்றிய பண்பாட்டு ஆய்வுமுறைக்கு புத்தூக்கம் கொடுக்கப்படாத ஒரு தேக்கநிலை இருந்துகொண்டிருந்தமைக்கான மற்றொரு காரணியாக இஸ்லாம் மதத்தினைத் தழுவிய மக்களும் அக்கரையோரங்களிலேயே வாழ்ந்து கொண்டு வந்திருந்தமையும் ஆகும். இக்காரணத்தினாலேயே புராதன – மத்தியகால இலங்கைத்தீவின் தலைநகரநிலைப்படுத்தப்பட்ட பண்பாட்டு வரலாற்றில் கடற்கரையோர மாகாண அபிவிருத்திகள் பற்றிய எவ்விதமான தகவல்களும் இணைக்கப்பட்டிருக்காமைக்கான பிரதான காரணியாக அமைந்தது. எம்மக்கள் வாழ்விலும் வழிபாட்டிலும் இக்குறைபாட்டினை உணர்ந்தவோர் நிலையிலேயே வடஇலங்கையின் பண்பாட்டுத்தளத்தினை பக்கச்சார்பற்றநிலையில் தனித்துவமான முறையில் அதனை உருவாக்கிய முறையின் பரிமாணத்தினையும், உருவாக்கியவர்களது பல்லினச்சார்பியல் நிலையினையும் தெளிவாக வெளிப்படுத்தும் பொருட்டு 'வடஇலங்கைப்பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம்' என்ற தலைப்பில் எம் எல்லோருடையதும் சிந்தனையைத் தூண்டக்கூடிய வகையில் இவ்வாய்வுரையை அமைத்துள்ளேன். அதேநேரத்தில் பேராசிரியர் கா.இந்திரபாலாவின் மிகச்சமீபத்திய நூலொன்றில்( The Evolution of an Ethnic Identity) தரப்பட்டுள்ள சமர்ப்பண உரையில் தெரிவிக்கப்பட்டிருந்த வாசகத்தினை மீண்டும் இங்கு நினைவில் கொள்ளத்தக்க வகையில் எனது உரையை வடிவமைப்பது மிகப்பொருத்தமானது என நான் இவ்விடத்தில் கருதுகின்றேன். அச்சமர்ப்பண வாசககம் இவ்வாறு அமைந்துள்ளது.

வரலாற்றுத்திரிபுகளின் நேரடிவிளைவாக உயிரிழந்த அப்பாவிகளுக்குச் சமர்ப்பணம். ( " To the innocents who lost their lives as a direct consequence of misinterpretations of History.")[3]

(இவ்வாசகத்தின் உட்பொருளை நாம் எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டும் என்பது எமது பிரதேசத்தில் நிகழ்ந்த அல்லது நிகழவிருக்கின்ற மாற்றங்களினாலேயே தீர்மானிக்கப்படும். அத்தகைய மாற்றங்களுக்கான மார்க்கங்களை கல்வி- ஆராய்ச்சி, அறிவியல் முறைகளின் அடிப்படையிலும், அதனை தனிப்பட்ட பங்களிப்பாக அல்லாது கூட்டுழைப்பின் பின்னணியில் எமது சமூகம் ஈட்டிக்கொள்வதற்கு இந்தப் பல்கலைக்கழகச் சமூகம் உதவவேண்டும் என்றவொரு மிகமுக்கியமான கோரிக்கையை இக்கற்றோரவையில் முன்னிலைப்படுத்தி, வடஇலங்கையின் யதார்த்தமான பல்லின-மதப் பண்பாட்டு அடித்தளத்தின் வரலாற்றின் பரிமாணத்தினை –அதனை உருவாக்கியவர்களை அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் விளக்க முற்படுகின்றேன்.)

## வடஇலங்கை – வரைவிலக்கணம்

வடஇலங்கை என்ற தொடர் பல நிலைகளில் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தமையை சான்றுகள் குறிப்பிட்டு நிற்கின்றன. தென்னிலங்கை-வடவிலங்கை என்ற பதங்கள் மத்தியகால இலங்கையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. தென்னிலங்கைக்கோன் நிசங்கமல்லற்குயாண்டு என்ற தொடர் மத்தியகால இலங்கையை வடவிலங்கையிலிருந்து பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட ஒருநடைமுறையை குறிப்பிடுகின்றது. வடமாவிலங்கை என்றொரு தொடர் சங்ககால இலக்கியப்பரப்பில் பயின்று வருவதனையும் காண்கின்றோம். வடவாரியர்கோன் யாழ்பிரமதத்தன் என்ற இன்னொரு இலக்கியக்குறிப்பும் சங்ககால இலக்கிய மரபில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வல்லிபுரம் பிராமிப்பொற்சாசனத்தில் இடம்பெறுகின்ற ஒரு தொடரான படஹர ஆதன என்பதற்கு வடக்கிலுள்ள ஆதனம் எனப்பொருள் கொண்டு, அது வடகரையைக்குறித்தது அல்லது வடஇலங்கையைக்குறித்தது எனப் பேராசிரியர் க. வேலுப்பிள்ளை கூறிய கருத்தினை மிகப் பொருத்தமானது என இங்கு நாமும் ஏற்றுக்கொள்ளலாம்[4]. இவை எவ்வாறிருப்பினும் எமது இந்தப் ஆய்வுப்பரப்பில் வடஇலங்கை என்ற பதம் வன்னி –யாழ்ப்பாணக்குடாநாடு என்ற இரு நிலப்பரப்புக்களும்

இணைந்த வகையில் காணப்படும் புவியியல் நிலத்தோற்ற எல்லைக் குட்பட்ட பிரதேசத்தினைக் கருதி நிற்கின்ற வகையில் இவ்வாய்வினை முன்னெடுத்துச் செல்கின்றேன்.

## வடஇலங்கையில் அண்மைக் காலத்தொல்லியல் ஆய்வுகளின் பெறுபேறுகள் வன்னி-யாழ்ப்பாணக்குடாநாடு

வடஇலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே அப்பிரதேசம் பற்றிய பண்பாட்டு இருப்பு தொடர்பாக அறிவியல் ரீதியிலான ஆய்வியல் சிந்தனைகள் பரிமாணமடைந்தன. வரலாற்றுத்துறையுடன் தொல்லியல் பாடநெறிகளும் இணைக்கப்பட்டிருந்தமை காரணமாக பிரதேசம் பற்றியதும், பண்பாட்டு ஒதுக்குமுறைகள் பற்றியதும், வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட அல்லது திரிபுபடுத்தப்பட்ட ஒரு பன்மைச் சமூகத்திற்குப் பொருந்தாத வகையில் வெளிவந்த வரலாற்று தகவல்களையும் எமக்குள் விதிக்கப்பட்ட பாதுகாப்புடன், அலசியாராய்து, அறிவியல் கண்கொண்டு அதன் ஆய்வு முடிபுகளை முன்னகர்த்த முடிந்தது. ஒரு சிறப்பான ஆய்வுத்தளம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடப்பட்டதன் பின்னணியில் பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.இந்திரபாலா, கா.கைலாசநாதக் குருக்கள், கா.சிவத்தம்பி, சி.க.சிற்றம்பலம், சி.பத்மநாதன், வி.சிவசாமி ஆகியோர் தற்துணிபுடன் தனித்துவமாகச் செயலாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பேராசிரியர்களினால் வழிநடத்தப்பட்ட மாணவர்களுள் குறிப்பிடத்தக்க சிலரே அடுத்த தலைமுறையினராக அவ்வாய்வுப்புலம் மறைந்து விடாதபடிக்கு அதனை வளர்த்தெடுத்த நிலையில், 1980ம் ஆண்டுக்காலப் பரப்பிற்குப் பின்னர் தொல்லியல்-வரலாற்றுக் கண்டுபிடிப்புக்களினூடாகவும், வெளியீடுகளினூடாகவும் பரபரப்பான மாற்றங்களை நிகழ்த்தி, பல்கலைக்கழகச் சாதனைப்பட்டியலில் பெயர்களைப் பொறித்துக் கொள்ளுமளவிற்கு கருமமாற்றியிருந்திருக்கின்றார்கள் என்பதனை இங்கு தொல்லியல் - வரலாற்றுக்குறிப்பாக்கி, அதனை இப்பல்கலைக்கழகச் சமூகத்திலுள்ள எமது இளைய தலை முறையினருக்கு தெரிவித்துக்கொண்டு,

அம்மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்த நிகழ்வுகளை மிகச்சுருக்கமாக இங்கு பட்டியலிட்டுக்காட்ட விழைகின்றேன்.

## வடஇலங்கைப் பண்பாட்டு வரலாற்று வெளிப்பாட்டின் தொல்லியற் தடயங்கள்

தென்னிந்தியா, இலங்கை என்பவற்றில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு பற்றி ஐரோப்பியர், இந்தியர், இலங்கையர் என பல்வேறுபட்ட தேசத்தவரும் ஆய்வுகள் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பாக மானிடவியலாளர், வரலாற்றாசிரியர், தொல்லியலாளர், சமூகவியலாளர் எனப் பலவகையினரும் ஆராய்ந்துள்ளனர். அந்தவகையில் இலங்கையின் தொல்லியல் வரலாற்றில் கி.பி. 1970 இன் பின் ஒரு திருப்புமுனைக் காலமாக, அதாவது தொல்லியல் அகழ்வாய்வுகள் பல இடம்பெற்ற காலமாக அமைந்துள்ளது.

- 1970 - கந்தரோடைமற்றும் பொம்பரிப்பு அகழ்வாய்வு (பென்சில்வேனியா)
- 1980 - மன்னாரில் தொல்பொருள் அகழ்வாய்வு **(International Team)**
- 1980 - முப்பது பெருங்கற்கால மையங்களை பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் கண்டு பிடித்தல்
- 1980/81 - ஆனைக்கோட்டை அகழ்வாய்வு **(Rescue Excavation)**
- 1983/1984 - மாயக்கை குகையில் கற்காலக்கருவிகள் கண்டுபிடிப்பு
- 1993/94 - பூநகரி தொல்பொருளாய்வு **(P.Pushparatnam)**
- 1995 கந்தரோடை அகழ்வாய்வு **(Rescue Excavation by S,Krishnarajah)**
- 2000 - சாட்டி அகழ்வாய்வு **(P.Pushparatnam)**
- 2011 - கந்தரோடை அகழ்வாய்வு (இலங்கைத்தொல்லியல் திணைக்களம்)

- 2011 - மாயக்கை குகை கற்கருவிகள் தொல்லியல் திணைக்களத்தினால் Palaeolithics என உறுதிப்படுத்தப்பட்டமை.
- இங்கு தரப்பட்ட கால ஒழுங்கில் தொல்லியல் மேலாய்வுகளும், அகழ்வாய்வுகளும் வடஇலங்கையில் பேராசிரியர்களான சி.க. சிற்றம்பலம் , கா. இந்திரபாலா, விமலா பெக்லி, பரமு புஸ்பரட்ணம், பொ.இரகுபதி, சிரான் தெரணியாகல, செ. கிருஸ்ணராசா போன்ற பலராலும் மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்வியற்பரிமாணம் - கட்டம் ஒன்று

பண்பாட்டு நிறுவனர்களாக ஹோமோ இறெக்ரர்ஸ்- மாயக்கை தந்த வரலாற்று மாற்றம் (1983)

வரலாற்றிற்குமுன் பண்பாட்டு வழித்தடங்கள் ( இரணைமடுப்பண்பாடு-01)

தொல்லியல் ஆய்வுகள் வரலாற்றிற்கு முற்பட்ட பண்பாட்டு வழித் தடங்களை இனங்காட்டியுள்ளன. இரணைமடுப்பண்பாடு (Iranaimadu Culture) தொடர்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து தொல்லியலாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வந்துள்ளமையைக் காணமுடிந்தது. இலங்கைத் தொல்லியலாளர்கள் இரணைமடுப் பண்பாட்டினை பல்வேறு நிலைகளில் அதாவது கற்காலப்பண்பாட்டின் பலநிலைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்து வருவதனைக்காணலாம். இப்பண்பாட்டுப் பரவலுக்குரிய வழித்தடங்கள் பல்வேறு திசைகளில் காணப்படுகின்றன. வடமராட்சி கிழக்குப்பரப்புடன் இரணைமடுவினை இணைத்துவைத்த வழித்தடம் இன்னும் மிகத்தெளிவாக அடையாளம் காணப்படாத போதிலும் வரலாற்றுக்கு முற்பட்டகால வாழ்வியல் தொடர்புகள் இவ்விரு பிரதேசங்களுக்கிடையே காணப்பட்டிருந்தமையினை மறுக்க முடியாதுள்ளது. எமது தொல்லியலாளர்கள் இரணை மடுப்பண்பாட்டின் பரவலை தெற்கே கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் வரைக்கும், மேற்கே கிளிநொச்சியிலிருந்து மாந்தை வரைக்கும் பரவி யிருந்தமையை தொல்லியலாதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளனர்.[5] யாழ்ப்பாணக்குடா நாட்டுடனான இரணைமடுப்பண்பாட்டுத் தொடர்புகளை எவருமே இதுவரையில் தெளிவாக எடுத்துக்காட்டவில்லை. வடஇலங்கையில் காலத்தினால் முற்பட்ட ஒரு பண்பாட்டு மையமாக

இரணைமடுப் பிராந்தியம் விளங்கி வந்திருந்தது என்பதற்கு அங்கிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்காலத்து எச்சங்கள் மாத்திரமல்ல, வரலாற்றின் தொடக்ககால சுடுமண்சிற்பங்கள்,வெளிநாட்டு மட்பாண்டங்கள், பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உள்நாட்டு மட்பாண்டங்கள் என்பன சிறந்த தொல்லியல் சான்றுகளாகும்.

இலங்கையின் பழங்குடிகள் என்ற நிலையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட மக்களது இனம், வாழ்வு முறை, குடியிருப்பு மையங்களின் பரவல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றிய ஆய்விற்கு அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகள் முதற்தரச் சான்றுகளாக உள்ளன. திட்டமிட்டவகையில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலமையங்களைக் கண்டுபிடித்து ஆய்வுசெய்யும் முயற்சிகள் இப்பொழுது குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் கண்டுவருகின்றது. தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பெற்று, தொடர்ந்து ஆய்விற்குட்படுத்தப்பட்ட மையங்களில் இருந்து கிடைத்த சான்றுகளும் வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை மக்கள் பற்றியும், அவர்களின் ஜீவனோபாயம் பற்றியுமான தகவல்களைத் தந்துதவுகின்றன.
இலங்கையில் மூன்று பிரதான வட்டாரங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியற் சான்றுகளை வழங்கும் பிராந்தியங்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1. இரத்தினபுரி, பலாங்கொட உயர்நிலம் உள்ளிட்ட மத்திய மலைநாட்டுப் பரப்பு.
2. வட மேற்கிலங்கையின் கரையோரப் பரப்புடனும் இணைந்த இரணைமடுப் பண்பாட்டுப் பரப்பு.
3. வட கிழக்கிலங்கையின் நந்திக்கடல் - நாயாறுக்குக் கீழ் கொட்டியாரத்திற்கு மேல் உள்ள பரப்பு ஆகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பரப்பினுள் விசாலமான அகழ்வுகள் இன்னும் மேற்கொள்ளப்படுவதற்கான காலம் கனிந்து வரவில்லை. அகழ்வுகள் இன்றியே இப்பொழுது முதன்முறையாக வரலாற்றுக்கு முந்தியகால யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலைபற்றியும் அறிந்துகொள்வதற்கேற்ற தொல்லியற்சான்றுகள் கிடைத்துள்ளன. பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வாழ்வு முறையானது பெருங்கற்காலப் பண்பாட்டுடனேயே ஆரம்பிப்பதனை தொல்லியலாளர்கள்

(பேராசிரியர் பொ. இரகுபதி உட்பட) எடுத்துக்காட்டியிருப்பினும் ஒரு புரட்சிகரமான மாற்றமாக HOMO ERECTUS மனிதன் வாழ்ந்த காலப்பகுதியாக பழங்கற்காலப்பரப்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தொல்லியலாய்வில் நிபுணத்துவம் பெற்றவரான சிரான் தெரணியாகல அதனை இப்பொழுது உறுதிப்படுத்தியுள்ளார். அந்தவகையில் யாழ்ப்பாணக்குடா நாட்டிலுள்ள வடமராட்சியில் மாயக்கைப்பிரதேசம் வரலாற்றுக்கு முற்பட்டகாலப்பரப்பாக தற்போது அறிவிக்கப்பட்டு, பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டில் இக்கட்டுரையாசிரியரினால் பருத்தித்துறைக்கண்மையிலுள்ள மாயக்கை எனத்தற்போது அழைக்கப்படும் குகைப்பிராந்தியத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சேர்ட்(Chert) வகையிலான பழங்கற்காலக்கருவிகளை அடிப்படையாகக் கொண்டே சிரான் தெரணியாகலவின் கருத்தினை இலங்கைத் தொல்லியற் திணைக்களம் 2011இல் பிரகடனப் படுத்தியுள்ளது.[6]

வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கையின் பண்பாடு பற்றிய ஆய்வியலில் மிக அண்மைக்காலத்து முக்கிய அபிவிருத்தியாக புதிய கண்டுபிடிப்பொன்று இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் வடமராட்சிப் பிரதேசத்தில் தம்பசிட்டியிலுள்ள மாயக்கை (மாயக்குகை) என்னுமிடத்திலுள்ள குகையின் முகப்பு வாயிலில் இருந்து இந்நூலாசிரியரினால் 1984 இல் தொல்லியல் மேலாய்வின்போது சேகரிக்கப்பட்ட பழங்கற்காலக் கற்கருவிகள் சில இப்பொழுது தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவை 600000 வருடங்கட்கு முந்திய பழங்கற்கால மனிதர்களுடைய கற்கருவிகள் என அடையாளம் காணப்பட்டமையானது ஒரு வரலாற்றுத்திருப்பமாக அமைந்துள்ளது. இப்பின்னணியில் மாயக்கை குகையினுள் பழங்கற்காலத்தினைச் சேர்ந்த ஹோமோ இறக்ரஸ் (HOMO ERECTUS) என்ற மனித இனம் வாழ்ந்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் சிரான் தெரணியாகல நேரடியாக இக்குகைப் பிரதேசத்திற்கு தொல்லியல் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரான கலாநிதி நிமால் பெரேராவுடன் வருகைதந்து, அப்பகுதியின் இயற்கைச்சூழலையும் நன்கு ஆராய்ந்து ,வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர் வாழ்ந்த பரப்பு அதுவென்பதனை

திட்வட்டமாக உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் இக்குகையின் உட்பகுதியை அகழ்வாய்வு செய்வதன்மூலம் இக்கண்டுபிடிப்பினை மேலும் உறுதிப்படுத்தலாம் என அவர்களால் நம்பப்படுகின்றது.

இதுவரையில் இலங்கையின் மத்திய மலைநாட்டுப்பரப்பிலிருந்து வரலாற்றுக்கு முற்பட்டகால கற்கருவிகளையும் மண்டையோடு, எலும்புக்கூடுகளையும் தொல்லியலாளர் அகழ்ந்தெடுத்துள்ளனர். இரத்தினபுரியில் முதன்முதலாக மனித எழும்புக்கூடுகளுடன் இணைந்த வகையிலான எலும்பிலான ஆயுதங்கள், கற்கருவிகள், தோல்பதனிடும் கற்கருவிகள், மிருக உயிர்ச் சுவடுகள் போன்றன கண்டுபிடிக்கப்பட்டன. இதனை இரத்தினபுரிப் பண்பாடு எனத் தொல்லியலாளர் குறிப்பிட்டழைத்தனர். இதற்குப் பின்னர் பலாங்கொடையிலிருந்தும், பண்டாரவளை யிலிருந்தும் மனித எலும்புக்கூடுகளுடன் இணைந்த தொல்லியல் எச்சங்கள் பல பெறப்பட்டன. அதன் பின்னர் அது பலாங்கொடைப் பண்பாடு என பெயர் சூட்டி அழைக்கப்படலாயிற்று. இவ்வாறு இரத்தினபுரிப் பண்பாட்டு – பலாங்கொடைப் பண்பாட்டு தொல்லியல் எச்சங்களுடன் கிடைக்கப்பெற்ற ஒரு சில மண்டையோடுகளை ஆராய்ந்தபோது அவற்றின் இயல்புகள் தென்கிழக்காசிய மற்றும் ஆஸ்திரேலிய இனத்தின் பிரதான அடிப்படைகளை கொண்டு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அப்பின்னணியிலேயே இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள் நிகழ்ந்ததாக முடிவெடுக்கப்பட்டிருந்தது. எனினும் இரணை மடுப்பண்பாட்டுப் பரப்பிலிருந்தே பழங்கற்கால மனிதவாழ்வு முறை இலங்கை முழுவதற்கும் பரவிக்கொண்டது என்ற தெரணியாகலவின் கருத்து வலுவடைந்து வந்துள்ளது என்பதற்கு வடமராட்சியிலுள்ள மாயக்கை குகைப்பரப்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கீழைப்பழங்கற்காலக் கருவிகள் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன.

தென்தமிழ்நாட்டில் கோத்தலையாற்றின் முகத்துவாரத்திலுள்ள அத்திரம்பாக்கத்திலேயே தென்னிந்திய பழங்கற்காலத்திற்குரிய கைக்கோடரிகள் 1885ல் கண்டுபிடிக்கப்பட்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சென்னைக்கருகிலுள்ள குடியம் (Gudiyam) என்றமையமும் கீழைப்பழங்கற்கால கருவிகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இரணைமடுப்பள்ளத்தாக்கினைத் தவிர

ஏனைய மத்திய மலைநாட்டுப் பரப்புக்களிலிருந்தே கற்காலக்கருவிகள் முதலில் கண்டுபிடிக்கப்பட்டாலும், தற்பொழுது களுத்துறை மாவட்டத்திலுள்ள தொரவக்க (Doravaka) குகைப்பரப்புக்குள்ளிருந்து (1991 இல் இருந்து) புதிய கற்கால யுகம் ஒன்று இலங்கையில் நிலவியமையை தொல்லியல் ரீதியாக உறுதிப்படுத்தியுள்ளனர். புதிய கற்காலத்திற்குரிய கற்கருவிகளும் உணவெச்சங்களும் இக்குகைப் பரப்புக்குள்ளிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[7] எனவே இலங்கையின் மிகத் தொன்மையான வரலாறு வடக்கிலிருந்தே ஆரம்பிக்கின்றது என்பதனையும், இரணைமடுப்பண்பாட்டின் ஒரு தொடர்ச்சியான பண்பாட்டு படர்ச்சியாகவே மாயக்கைப் பண்பாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பதும் இப்பொழுது தெளிவாகின்ற விடயங்களாக உள்ளன.

இந்தவகையில் மாயக்கைப்பரப்பிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பழங்கற்காலக் கருவிகள் வடஇலங்கையின் பண்பாட்டுத்தொடக்கத்தினை திட்டவட்டமாக எடுத்துக்காட்டும் முதற்தரச்சான்றுகளாக அமைந்துள்ள நிலையில் இலங்கைவரலாற்றின் தொடக்கத்தினையே மாற்றி எழுதவேண்டிய தேவை இப்பொழுது பண்பாட்டு வரலாற்றாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சிரான் தெரணியகலவின் கூற்றுப்படி, தென்னாசியாவின் வரலாற்றுக்கு முற்பட்டகால வரலாற்றினையே மாற்றி எழுதவேண்டிய ஓர் அவசியத் தேவை மாயக்கை கற்கருவிகளின் கண்டுபிடிப்புடன் ஏற்பட்டுள்ளதாக அறிகின்றோம்.[8]

இப்பின்னணியில் வடஇலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக அமைப்புப் பற்றியும், அதன் இயக்கவியல் மற்றும் பண்பாடு பற்றியும் ஆய்வுசெய்ய முற்படும்போது பழங்கற்கால பண்பாட்டின் கீழ்எல்லை கி.மு. 29000ஆம் ஆண்டுகள் வரை நீடித்துச் செல்வதனைக் காணலாம். B.P. 300000 வருடங்களிலிருந்து கி.மு.29000 வருடங்கள் வரைக்கும் இலங்கையில் (வடஇலங்கையிலும்) வாழ்ந்திருந்தவர்கள் வேட்டையாடுதலையே பிரதானமான தொழிலாகக் கொண்டு வாழ்ந்த மக்கட்கூட்டத்தினர் என்பதனை இரணைமடு அகழ்வுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உணவெச் சங்களிலிருந்து உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது. இவர்களது வாழ்க்கைமுறையை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் மாயக்கைப் பண்பாட்டு வாழ்க்கை என நாம் குறிப்பட்டு அழைப்பதே இனிப் பொருத்தமாகும்.[9]

## வாழ்வியல் பரிமாணம் கட்டம் -இரண்டு
## வடஇலங்கையின் நுண்கற்கருவி வடிவமைப்பாளர்கள்
## (இரணைமடுப்பண்பாடு-02)

இரணைமடுப்பண்பாட்டின் அடுத்த இரண்டாவது மண்படை குறுணிக்கற்கால கருவிகளையும் உணவெச்சங்களையும் கொண்டிருப்பதனை சிரான் தெரணியாகல உட்பட வெளிநாட்டுத் தொல்லியலாளர் பலரும் நன்கு உறுதிப்படுத்தியுள்ளனர். மிகவும் நுண்மையான, பிறைவடிவ, கோண-முக்கோண வடிவ படிகக்கருவிகள் இக்குறுணிக்கற்காலப் பண்பாட்டுக்குரிய கருவி வடிவமைப்பாகும். பலாங்கொடை மனிதனின் கருவித் தொகுதி கோணவடிவக் குறுணிக் கற்களினால் அடையாளங் காணப்படுகின்றது . அவை குவாட்ஸ், சேட் கற்களின் பிறை போன்ற முக்கோண சரிவகத் திண்ம வடிவங்களிலமைந்த 4செ.மீ இலும் குறைவான நீளங்கொண்ட சிறு துண்டங்களைக் கொண்டிருந்தன. அத்தகைய கோணவடிவ குறுணிக்கற்கள் முதலில் ஐரோப்பாவில் வரையறுக்கப்பட்டவாறு மத்திய கற்காலத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. ஐரோப்பாவில் கோணவடிவ குறுணிக்கல் மரபிற்கான காலத்தால் மிகமுற்பட்ட தேதிகள் இற்றைக்கு ஏறத்தாழ 12,000 ஆண்டுகளுகளுக்கு முற்பட்டதாகும். எனவே பற்றடொம்ப குகையில் இற்றைக்கு 28,500 ஆண்டுகளுக்கு முன்பும் புந்தலவின் இரு கடற்கரை அமைவிடங்களில் இற்றைக்கு 28,000 ஆண்டுகளுக்கு முன்பும் பெலி குகையில் இற்றைக்கு 27,000 ஆண்டுகளுக்கு முன்பும் அத்தகைய கருவிகள் காணப்பட்டமை வியப்பைத்தருவதாக அமைந்தது. ஐரோப்பாவில் இருந்ததிலும் ஏறத்தாழ 16,000 ஆண்டுகளுக்கு முன்தாக இலங்கை இந்த எடுப்பான தொழில் நுணுக்கக் கட்டத்திற்குரிய சான்றினையளித்தது. எனினும் இந்த முரண்பாடு இற்றைக்கு 27,000 ஆண்டிற்கு மிக முற்பட்ட சந்தர்பங்களில் ஆபிரிக்காவில் ஸயர், தென்ஆபிரிக்கா போன்ற வேறுபட்ட பகுதிகளில் கோணவடிவக் குறுணிக் கற்கள் கண்டுபிடிக்கப் பட்டமையுடன் தீர்வு பெற்றது.[10]

இற்றைக்கு 28,500 ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்தே மிகவும் நுண்மைவாய்ந்த இக்கற்கருவிகள் இலங்கையில் வடிவமைக்கப்பட்டு வந்தாலும் அக்காலத்தில் வாழ்ந்த மனிதன் எலும்பு, மான் கொம்பு என்பவற்றிலிருந்து ஆக்கிய கருவிகளாக, சிறப்பாக சிறு எலும்பு

முனைகள்- எலும்பு ஊசிகள் மற்றும் தூண்டில் எலும்புக்கருவிகள் போன்றவற்றை மிகுதியாக உருவாக்கியிருந்தான். ஓடுகளிலான மணிகளும் காலத்தால் முந்திய இச்சந்தர்ப்பங்களிற் காணப்பட்டன. பற்டொம்ப குகை போன்ற நாட்டின் உட்புற அமைவிடங்களில் கடற் சிப்பிகள் காணப்பட்டமை கடற்கரையோரத்திற்குமிடையில் தொடர்புகளின் பரந்த வலையமைப்பு ஒன்று இருந்தமையை காட்டுகின்றது. பெலி குகையிலிருந்தான சான்று இற்றைக்கு 27,000 ஆண்டுகளுக்கு மிக முற்பட்ட ஒரு காலகட்டத்தில் கடற்கரையிலிருந்து அங்கு உப்பு கொணரப்பட்டமையைச சுட்டுகின்றது . உலர் வலயத்தின் வேறுபட்ட பகுதிகளில் அவதானிக்கப்பட்ட குகைச்சித்திரங்கள் குறிப்பாகத் தந்திரி மலைப்பரப்பில் குகைக்குள் காணப்படும் ஓவிய வரைபுகள் மானிட வியல் ஆய்வாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டபடி அவை குறுணிக்கற்கால வேடர்களின் படைப்பாகும் என நம்பப் படுகின்றது. குறுணிக்கற்காலத்திற்கு சற்று முற்பட்ட வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தைச் சேர்ந்த படைப்புக்களும் தந்திரி மலை குகையினுள் வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மதக்கிரிகைகள் பற்றிய தோற்றப்பாடுகளுடனான சான்றுகள் மிகவும் அரிதாகவே உள்ளது. இறந்தவர்களை தனது வாழிடத் தலங்களினுள் அடுத்தடுத்து புதைப்பது பலாங்கொடை மனிதர்களின் நியமமாக இருந்தது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் உள்ளன. இந்நோக்கத்திற்குக் குறித்த சில எலும்புகளை அவன்தெரிவு செய்து வைத்திருந்தான. ராவணல்ல குகை, பாகியன்குகை ஆகியவற்றில் எலும்புகள் மீது வைபவரீதியில் செம்மண்பூசப்பட்டிருந்தது. இவ்வழமைகள் வேடுவர்களுடையதையன்றி அந்தமான் தீவினரது சவஅடக்க வழமைகளை பெரிதும் ஒத்தவையாக இருப்பதும குறிப்பிடத்தக்கது.[11]

மத்திய கற்கால பலாங்கொடைப் பண்பாட்டிலிருந்து வரலாற்று உதயகால இரும்புயுக ஆரம்பத்திற்கான மாற்றங்கள் தொடர்பாக இலங்கையிலே ஆய்வாளர்கள் கவனம் செலுத்தவில்லை. கேகாலைக்கு அண்மையில் உள்ள தொரவக்ககந்த குகையிலான அண்மைக்கால அகழ்வுகள் இச்சங்கடமான நிலையை இப்பொழுது நன்கு தெளிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்குகையை அகழ்ந்த டபிள்யூ.எச் விஜயபாலவின் கருத்திற்கமைய இற்றைக்கு 6300 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு மாட்பாண்டங்கள் (கற்கருவிகளுடன் ) பயன்படுத்தப்பட்டமைக்கும் தானியவகை ஒன்று பயிரிடப்பட்டிருத்தல்

கூடும் என்பதற்கும் சான்றுகளை எடுத்துக்காட்டியுள்ளார். (அ) தென்னிந்தியா புதிய கற்காலம் கி.மு. 2000 ஆண்டுகள் அளலேனும் பழமைவாய்ந்தது. மற்றும் (ஆ) தொறவக்க கந்த வில் கரும் மட்பாண்டங்களாகக் குறிப்பிடப்பட்ட மட்பாண்டங்களுக்கு முற்பட்டதாக தனிச் சிவப்புப்பாண்டம் காணப்பட்டது. தோறவக்க கந்த கரும் செம்பாண்டம் அநுாரதபுரத்தில் ஏறத்தாழ கி.மு 900 ஆம் ஆண்டிற் குரியதாகத் தேதியிடப்படுகின்றது. எனவே. தோறவக்க கந்தவின் செம்பாண்டம் அதற்கு முற்பட்ட தேதியைச் சேர்ந்ததாதல் வேண்டும். தீபகற்ப இந்தியாவின் புதிய கற்காலத்திற்குரிய வகைமாதிரியான நேர்த்தியாக்கப் பட்ட கோடரிகள் (Polished Axe) மற்றும் மட்பாண்டங்கள் ஆகியவை இலங்கையில் இன்னும் கண்டுபிடிக்கப்படாமை காரணமாக புதிய கற்காலத்தின் தொடர்ச்சியை இன்னும் உறுதிப்படுத்த முடியாமலுள்ளமை குறிப்படத்தக்கது.[12]

இரணைமடுவிலிருந்து மன்னார் வில்பத்து வரைக்கும் , இரணைமடுவிலிருந்து மாங்குளம் வரைக்கும் வடஇலங்கையின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் குறுணிக் கற்கருவிகளைப் பயன்படுத்தி, ஜீவனோபாயத்தினை மேற்கொண்ட மனிதன் வாழ்ந்தவனாகக் காணப்படுகின்றான். ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் மட்டும் குறுணிக்கற்கால மனிதனது உறைவிடங்கள் காணப்படாமைக்குரிய காரணங்கள் யாவை? பேராசிரியர் பொ. இரகுபதியின் கருத்தளவில் ஒரு சில மையக் குடும்பங்கள் காரைநகரிலுள்ள களபூமியில் மட்டுமே வாழ்திருத்தல் கூடும் என்பதை களபூமியில் அடையாளம் காணப்பட்ட பெருங்கற்காலப் படையல்களுடன் இணைந்திருந்த Microliths கருவிகளை அடிப்படையாகக் கொண்டு உறுதிப்படுத்தியுள்ளார். இக் காரணத்தினாலேயே யாழ்ப்பாணக்குடாநாட்டின் புராதனக்குடியேற்றம் காரைநகர் - களபூமி போன்ற மேற்குப்பரபபிலிருந்து உருவாகி வலிகாமம் - கிழக்கு, வடமராட்சி நோக்கி குடித்தொகை பரந்தது என அவரால் ஊகிக்கக் காரணமாகியது. ஆனால் இப்பொழுது அக்கருது கோள் முற்றிலும் பலமிழந்துவிட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாழ்வுத்தொடக்கமே பழங் கற்காலத்திலிருந்தே ஆரம்பிப்பதனை தென்னிலங்கை இன்று ஏற்றுக்கொண்டுவிட்டது.[13]

**வாழ்வியற்பரிமாணம் - கட்டம் மூன்று**
**குளக்கட்டுச் சொந்தக்காரர்களாக ஆனைக்கோட்டை மனிதர்**
**ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி பெற்றுத்தந்த பண்பாட்டு மூலகங்கள்**
**ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி பெற்றுத்தந்த வரலாற்று மாற்றம் (1980)**

வடஇலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் மட்டுமன்றி, முழுமையாக இத்தென்னாசிய வட்டகையின் வரலாற்றுப் பரிமாணத்தில் ஒரு பெருந்தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த தொல்லியல் நிகழ்வு 1980 ஆம் ஆண்டில் எமது பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினரால் ஆனைக்கோட்டையில் ஒரு களமமைத்து நிகழ்த்தப்பட்டமையை பெருமையுடன் குறிப்பிட்டுக கொள்ளவிரும்புகின்றேன்.

தற்போது ஐரோப்பிய நாடொன்றில் (சுவீடனில்) வாழ்ந்துகொண்டிருக்கும் பேராசிரியர் பொ.இரகுபதி அவர்களின் கலாநிதிப்பட்டத்திற்குரிய ஆய்வின் நிமித்தம் 1980ம் ஆண்டின் பிற் கூற்றில் குறிப்பிட்டபிரதேசத்திற்குரிய களஆய்வினை முன்னெடுப்பதற்காக நானும் இந்த ஆய்வாளருடன் இணைந்த வகையில் எமது வரலாற்றுத் துறை மாணவர்களுடன் வலிகாமம்-மேற்கிலுள்ள குறிப்பாக ஆறுகால் மடப்பிராந்தியத்திலுள்ள ஆவுரஞ்சிக்கற்கள்முதல் கிணறுகள்-துலாக்கள் வரையான பண்பாட்டுக் கூறுகளை புகைப் படமெடுத்தும், வரைந்தும் ஆவணப்படுத்திக் கொண்டிருந்த வேளையில், ஒரு கூட்டம் உழவுயந்திரங்களில் வயற்பரப்பிற்குரிய மண் யாழ்ப்பாணம் நோக்கி ஏற்றிச் செல்லப்படுவதனை அவதானித்தோம். இதனால் மண் வெட்டப்படுகின்ற கிடங்கு - குளி போன்றவற்றை அவதானிப்பதற்காக விரைந்து செயற்பட்டு, அவ்வுழவு இயந்திரங்களை நிறுத்தி, மண் அகழும் ஆனைக்கோட்டை மையத்தினை அறிந்தது மாத்திரமன்றி, குறிப்பிட்ட உழவு இயந்திரமொன்றின் மட்தொகுதியின் மேற்பரப்பில் கந்தரோடைப் பரப்பிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் போன்றவை மிதந்து காணப்பட்டமையை அவதானித்தோம். அவற்றுள் கிடைத்த பித்தளையினாலான குடுமி ஊசிகளே( Hair Bins) எமக்கு அம் மண் அகழப்படும் இடத்தின் தொன்மையை தெளிவாக்கிய செய்பொருள் எச்சங்களாக (Artifacts) அமைந்திருந்தன. பெருங்கற்கால யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் தெல்லிப்பழை மஹாஜனாக் கல்லூரியில்

பொ.இரகுபதி ஆற்றிய நினைவுச் சொற்பொழிவொன்றில் பின்வருமாறு ஆனைக்கோட்டை பெருங்கற்கால ஈமக்காட்டு அகழ்வாய்வின் பெறுபேறுகள் பற்றி குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.[14] அது பின்வருமாறு:

“1980ஆம் ஆண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்களின் ஆதரவில், இப்பிரதேசத்தில் ஆய்வுகளைச் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் யார்? எப்பொழுது அவர்கள் இங்கு வாழ்ந்தார்கள்? எப்படி வாழ்ந்தார்கள்? இப்பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டிற்குக் காரணமான வரலாற்றுப்போக்கு என்ன? இத்தகைய வினாக்களே யாழ்ப்பாணத்தின் ஆதிவரலாறு குறித்த இந்த ஆய்வுகளிற்கு அடிப்படையாக அமைந்தன.”

“எவ்வாறாயினும் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்த வரையில், குறுணிக்கற்பண்பாட்டிற்குரிய தடயங்கள் எதுவும் இதுவரையும் இங்கு கிடைக்கவில்லை. எங்கள் ஆய்விற்கெட்டியவரையில் யாழ்ப்பாணத்தில் மனிதக் குடியேற்றம் பெருங்கற் பண்பாட்டுடனேயே ஆரம்பமாகின்றது. இவ்வகையில், இப்பிரதேசத்தின் பண்பாட்டு ஆரம்பமே இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்தும் தனித்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.”

“1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொண்ட மேலாய்வொன்றில், ஆனைக்கோட்டையில் பெருங்கற்பண்பாட்டுத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தொடர்ந்து இங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆகழ்வாய்வில் பெருங்கற்பண்பாட்டு ஈம அடக்கங்கள் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக வெளிக்கொணரப்பட்டன.”

“ஆய்வுக்குழியில் இரு எலும்புக்கூட்டு அடக்கங்கள் மேற்குக் கிழக்காக நீட்டிப்படுத்த வாக்கில் காணப்பட்டன. இவற்றைச் சுற்றி ஈமப்படையல்கள் பெருங்கற்காலத்திற்குரிய மட்பாண்டங்களில் இடப்பட்டிருந்தன. இரும்புக் கருவிகள், இரும்பு அகல்விளக்கு, சங்குகள், மணிவகைகள், கடல் உணவு எச்சங்கள், மாமிச உணவு எச்சங்கள், சுடுமண்ணாலான வட்டமான தாயம்போன்றதொரு விளையாட்டுக் கருவி ஆகிய பல்வேறுவகைப் பொருட்கள் ஈமப் படையல்களில் இடம்பெற்றிருந்தன.”

“எலும்புக் கூடொன்றின் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த கறுப்புச் - சிவப்பு வட்டில் ஒன்றில் பித்தளையாலான முத்திரையொன்று கிடைத்தது. இது முத்திரை மோதிரமொன்றின் பாகமாகலாம். அதில் இருவகையான எழுத்துக்கள் இருக்கின்றன. முதலாவது வரியில் பெருங்கற்கால மட்பாண்டங்களில் வழமையாகக் காணப்படும் குறியீட்டெழுத்துக்களும் இரண்டாவது வரியில் கி.மு 3-2ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமி எழுத்துக்களும் காணப்படுகின்றன. இவ்விருவகை எழுத்துக்களாலும் குறிக்கப்பட்டுள்ளது ஒரு பொருளேயென்று கொண்டால் பிராமி எழுத்துக்களைப் படிப்பதன்மூலம் படிக்க முடியாததாகிய பெருங்கற்காலக் குறியீட்டு எழுத்துக்களுக்கு விளக்கம் கொடுக்கலாம். இந்த அடிப்படையில் பேராசிரியர் கா.இந்திரபாலா இதன் பிராமிப் பகுதியை ‘கோவேதன்’ அல்லது ‘கோவேந்த’ எனப்படித்து இதன்மூலம் குறியீட்டு எழுத்துப் பகுதிக்கு விளக்கங் கொடுத்துள்ளார். இவ்வாசகங்களின் மொழி ஆதித் தமிழ் அல்லது ஆதி மலையாளம் என்பது இவர் கருத்தாகும். இக் கட்டுரையாளர் பிராமிப்பகுதியை ‘கோவேத்’ அல்லது ‘கோவேத’ அல்லது ‘கோவேதம்’ எனப் படித்துக் குறியீடுகளுக்கு விளக்கங் கொடுத்துள்ளதுடன் இவ்வாசகங்களின் மொழி ‘ஆதித்திராவிடம்’ எனக் கருதுகின்றார். இவ் வாசகங்கள் ‘கோவேந்தன்’ என்பதன் மூலவடிவம் என்பது இருவரதும் பொதுவான கருத்தாகும். இம் முத்திரைகளின் தொல்லெழுத்தியலை அடிப்படையாகக் கொண்டே ஆனைக்கோட்டைப் பெருங் கற்பண்பாட்டின் காலம் கி.மு.3-2 ஆம் நூற்றாண்டென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.” இவ்வாறு பேராசிரியர் பொ.இரகுபதி பெருங்கற்கால யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் நினைவுப்பேருரை ஒன்றினை மஹாஜனாக்கல்லூரியில் ஆற்றியிருந்தார். இவர் தனது ஆய்வினூடாக யாழ்ப்பாணக்குடாநாட்டின் புராதன குடியிருப்புக்கள் பற்றிய பரிணாம வரலாற்றினை தொல்லியல் அடிப்படையில் இரண்டு பெருங்கற்பண்பாட்டு மையங்களை அகழ்வு செய்தும் ஏனைய இடங்களை மேலாய்வு செய்தும் தனது ஆய்வறிக்கையினை பிரசுரித்திருந்தார். இப்பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியிருந்த காலத்தில் அவருடைய தொடக்ககால ஆய்வு முயற்சிகள் அன்று வரலாற்றுத்துறைக்கு பாரிய பங்களிப்புக்களை நல்கியதுடன் இன்று எமக்கு பாரிய அனுபவங்களை பெற்றுத்தந்திருந்தன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

யாழ்ப்பாணத்தில் இரும்பு யுகத்தின் ஆரம்ப காலம்

வரலாற்று உதயகால இரும்பு யுகத்தின் ஆரம்பம் தென் இந்தியாவில் கி.மு 1200 ஆம் ஆண்டிற்கு முன்னர் இல்லாவிடினும் குறைந்தபட்சம் அவ்வாண்டுக் கால அளவிலேனும் நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் இதன் காலத்தால் மிக முந்திய தோற்றப்பாட்டுடன் அநுராதபுரத்திலும் சீகிரியாவிலும் கி.மு. 1000-800 ஆன காலப்பகுதிக்கு கதிர்கார்பன் தேதியிடப்பட்டுள்ளது. (தெரணியகலை1992:709-29). அநுராதபுரத்தில் குடியிருப்பு கி.மு. 800 ஆம் ஆண்டளவில் பரப்பில் 10 ஹெக்டயாருக்கு மேற்பட்டதாக இருந்தது. கி.மு. 700-600ஆன காலப்பகுதியில் அது 50 ஹெக்டயர்களையேனும் கொண்டதாகி „ஏற்கெனவே ஒரு நகரமாக விளங்கியது.[15] இதுவரை இலங்கையில் இரும்பு யுக ஆரம்பகாலத்தைச் சேர்ந்த பிற குடியிருப்புகள் எவையும் இடம் குறித்துரைக்கப்படாவிடினும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, சாட்டி என்பனவும், மன்னாரில் மாதோட்டம் (மாந்தை), புத்தளத்தில் பொன்பரிப்பு, களனியில் பிலபிற்றிய, திஸ்ஸமஹாராம என்பனவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டு மையங்களாக கணிக்கப்பட்டிருந்தன. இலங்கையின் பெருங்கற்கால இரும்புயுக ஆரம்பகாலச் சவக்கிடங்குத் தொகுதி[16] தீபகற்ப இந்தியாவினுடையதை ஒத்து விளங்குகின்றது. அது தேதியிடப்பட்ட ஒரேயோரு அமைவிடமான அப்பங்காற்றுவவில் கி.மு. 770-400 ஆன அதன் கதிர்காபன் காலத்தாற் காட்டப்படுகின்றவாறு முதன்மையாக அல்லது சாத்தியமான ரீதியில் முழுமையாக வரலாற்று உதயகாலத்தினுள் இடம்பெறுவதாக உள்ளது. இலங்கையின் முழுமொத்தமான இரும்புயுக ஆரம்பகாலப் பண்பாட்டினுள் அச்சவக்கிடங்குப் பாங்கு இடம் பெறும் இடம் இன்னும் துணியப்படவில்லை. எடுத்துக்காட்டாக இப்பங்கற்றுவவிற் போல இந்த மயானபூமிகள் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சமகாலக் குடியிருப்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.[17] எதிரிடையாக அநுராதபுரத்தில் இரும்புயுக ஆரம்பகாலக் குடியிருப்பு அதனுடன் அரிதாகவேனும் பிணைக்கப்படத்தக்க பெருங்கல் மாயனபூமி யொன்றைக் கொண்டிருக்கவில்லை. அநுராதபுர பெருங்கல் சவக்கிடங்குத் தொகுதி அநுராதபுரத்தில் வதிந்தோரின் சுற்றெல்லையில் மதகுருக்கள் போன்ற சிறப்பான மக்கள் தொகுதியுடன் மட்டும் சம்பந்தப்பட்டதாக இருத்தல் கூடும்.[18] சுருங்கக்கூறின் பெருங்கற் சவக்கிடங்குப் பாங்கு இந்தியாவின்

வாரலாற்று உதய கால இரும்பு யுக ஆரம்பப்பண்பாட்டுத் தொகுதியின் தனியொரு பக்கத்தோற்றப்பாடு மட்டுமேயாகும் எனக்குறிப்பிடலாம்.

இலங்கையில் இரும்பு யுக ஆரம்பகால மனிதனின் உயிரியல் மற்றும் மானிடவியல் இயல்புகள் பலாங்கொடை மனிதனின் இயல்பினை விட வேறுபட்டதாக உள்ளது. எனினும் ஆய்ந்தறியப்பட்ட தனியொரு பெருங்கற்கால இடுகாடான பொம்பரிப்பிலிருந்து பெறப்பட்ட சான்றுகள் குறிப்பிடத்தக்களவில் கலப்பு இனவிருத்தி இடம் பெற்றிருக்ககூடும் என்ற கருத்தை தருவதாக உள்ளது. இது கி.மு. 500 இற்கு முன்னரும் பெல்லன் பண்டி பலஸ்ஸவில் கி.மு 4500 இற்குப்பின்னரும் அக்கலப்பு இனவிருத்தி இடம்பெற்றிருக்காலம் எனத் தொல்லியலாளர் கருதுகின்றனர். இலங்கையின் உள்ளார்ந்த விவசாய ஆற்றல் குறிப்பாக அதன் நிறைந்த நீர்வழங்கல் மத்திய கோட்டு அடர்ந்த மழைக்காடுகளையும் கனமான தரைகளையும் அடக்கியாள்வதற்கான இரும்புத் தொழில் நுணுக்கத்திறனுடன் சேர்ந்த வாழ்க்கைத திறனே அம்முன்னேற்றத்திற்கான பிராதான காரணியாக இருத்தல் கூடும். தீவின் வடமேற்கில் அமைந்த முத்துக்குளிப்பு கடற்தள மேடைகள், சேருவில் செப்புதாதின் பிராதான தோற்றுவாயாகக் காணப்பட்டமை, தென்கிழக்கு ஆசியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கு மிடையில் நிகழ்ந்த நெடுந்துார வியாபாரத்திற்கு ஏற்றியிறக்குமிடத் துறை முகமாக இலங்கை அமைவு பெற்றமை என்பன ஏனைய பிரதான கவர்சிகரமான அம்சங்களாகும். (கி.மு. 2ஆம் ஆயிரமாம் ஆண்டுக்காலத்தில் பரோவா மன்னர்களது எகிப்தில் பயன்படுத்தப்பட்ட மிளகு, கேரளம், இலங்கை அல்லது தெற்கு ஆசியாவிலிருந்து தான் சென்றிருக்கவேண்டும்). அதன்பின்னர் தென்னிந்தியாவிற்கு அப்பாலிருந்து வந்தோருக்கும் இலங்கையிற் குடியேறும் நாட்டம் துரிதமாக விருத்தியடைந்திருக்க வேண்டும். அவ்வெழுச்சியானது இந்தோ- கங்கைச் சமவெளியின் இராண்டாம் நகரமயமாக்கத்துடன் ஒரே சமயத்தில் நிகழ்நத்து என அல்ஜின் முன்னர் குறிப்பிட்டவாறு கி.மு. ஏறத்தாழ 900 ஆம் ஆண்டளவில் அநுராதபுரம் குறைந்த பட்சம் 10 ஹெக்டயர் பரப்பளவினதாக இருந்தது எனத்துணியப் படுகின்றது. (இன்னும் கூடுதலான தாகவும் இருந்திருக்ககூடும் ). அவ்வேளையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால கற்கால வாழ்வுமுறையில் அமைந்த கற்களைக் கொண்டு கருவிகளைச் செய்யும் தொழில் நுணுக்கமானது அநுராதபுரத்தில் முற்றிலும் இரும்புத்தொழில் நுணுக்கமயமாகியது. முன்னேற்ற மெய்திய

பிற போக்குகள் செப்பு - கலப்பு உலோக ஆக்கப் பொருட்கள், உயர்தரமான மட்கலங்கள் (குறிப்பாக கரும் செம்மட்பாண்டங்கள்) ஆடு-மாடு - குதிரைகள் வளர்ப்பு, நெற்செய்கை என்பனவாகும். கி.மு. 700-500 வரையான காலப்பகுதியில் அநுராதபுரம் 50 ஹெக்டயாருக்கும் கூடுதலான பரப்பளவைக் கொண்டிருந்தது. இந்தியாவின் இராண்டாவது நகரமயமாக்கற் தோற்றப்பாடு இலங்கையில் எதிர்பாராதவிதத்தில் ஒன்றில் துரிதமான துாண்டற்பரம்பல் அல்லது நெடுந்துாரவியாபாரம் போன்ற வெளிப்புறத் துாண்டல் காரணமாக நகரமயமாக்கம் மிகவேகமாக அனுராதபுரத்திலும், அதற்குச்சமமான நிலையில் கந்தரோடையிலும் வளர்ச்சி பெறக்காரணமாகியது.[19]

## வாழ்வியற்பரிமாணம் - கட்டம் நான்கு பௌத்த வாழ்வும் நீரியல் தொழினுட்பமும் ஒன்றிணைதல் கந்தரோடை வழங்கும் வாழ்வியற் கோலங்கள் கந்தரோடையை இணைத்து வைத்த வெளிநாட்டு வாணிக - கலாசார மையங்கள்

இலங்கைத்தீவின் பண்பாட்டு வளர்ச்சியிலும் பரிமாற்றத்திலும் வாணிப மையங்கள் பெரும் பங்கு வகித்து வந்துள்ளன. அந்த வகையில் எண்ணற்ற கடல் முகப்புத்தளங்களைத் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணக்குடாநாட்டில், வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து வாணிப மார்க்கங்கள் கரையோர கடல் முகப்புத்தளங்களை இணைத்து வைத்திருந்த அதேநேரத்தில் உள்நாட்டு நன்னீர்ப்பரப்பு முகப்புக்களில் அமைந்திருந்த குடியிருப்பு மையங்களையும், புனிதம் வாய்ந்த சமயத் தலங்களையும் பெருந்தெருக்களினால் இணைத்து வைத்த நிகழ்வினூடாக, நகரவாழ்வியல் உருவாவதற்கும் ஏற்ற சூழ்நிலையை வழங்கியிருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கந்தரோடை என்ற மையமும் இதற்கு விதிவிலக்கல்ல. வரலாற்று உதயகால நகர உருவாக்கமொன்று குடாநாட்டில் நிகழ்ந்தேறியமைக்கு கந்தரோடை மிகச்சிறந்த உதாரணமாகும். இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கந்தரோடைமீதான தொல்லியல் மேலாய்வுகளும் அகழ்வாய்வுகளும் வழங்கியுள்ள பெறுபேறானது ஒரு வரலாற்று உதயகால நகரக்கட்டமைப்பிற்குரிய சான்றுகளை அம்மையம் கொண்டிருப்பது வெளிப்படையாகின்றது.

ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்தரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே அதன் பண்பாட்டு வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும். அந்த வரலாறு எங்கேயோவொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிகசுப்பட்டுவிட்ட நிலையில் இலங்கை வரலாற்றினைக் கூறிச்செல்கின்ற பாளி – பௌத்த இலக்கியங்களினூடாகவே அவற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அநுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்தினூடாகப் பார்த்ததுபோல், அதே இலக்கியத்தினூடாகவே கந்தரோடையையும் நாம் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம். ஆனால் யதார்த்தம் என்பது இன்னொன்றாகவுள்ளது . சிலப்பதிகாரம், மணிமேகலையூடாகக் கந்தரோடையை ஆராய முற்படும்போது இந்தப்பிராந்தியம் கண்ணகி வழிபாட்டுடனும் அம்மரபுகளுடனும் பிணைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். முதலாம் கஜபாகு – சேரன் செங்குட்டுவன் பண்பாட்டுத் தொடர்புகளின் பின்னணியில் கயல்கண்ணியான கந்தரோடை முக்கிய பங்கினைச் செலுத்தியுள்ளது. கண்ணகிமரபு இலங்கையில் பத்தினி வழிபாடாகிய செயற்பாடு நிகழ்ந்த மையம் கந்தரோடையே.இதனை விரிவாக எதிர்காலத்தில் ஆராயவேண்டிய பொறுப்பு எமது ஆய்வாளருக்குண்டு. அப்போதுதான் இழந்துபோன ஈழத்தமிழர் வரலாற்றுப் பக்கங்கள் கந்தரோடையிலிருந்து துலக்கம் பெறும். கயல்கண்ணி கபாடபுரமாகிப் பின் கந்தரோடையாகிய செய்தியை மறந்து, கதிரகொட கந்தரோடையான செய்தியையே நாங்கள் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டு, கந்தரோடைக்கு சிங்கள – பௌத்த சாயலையும் பூசிவிட்டோம். ஆனால் கந்தரோடையின் பண்பாட்டுப் பாதையூடாக வந்த புதை மண்படையடுக்குகளை விஞ்ஞான ரீதியில் உரித்துரித்து ஆழத்திற்கு எடுத்தோமாயின், பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய நாகரிக நகர மையமொன்றினைக் கந்தரோடை தாங்கியிருந்த வகையைக் கண்டு கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். Sir ஐராவதம் மகாதேவன் கூட கந்தரோடையின் படிந்துபோன மண்படையடுக்கினுள் கபாடபுரத்தின் எச்சங்கள் புதையுண்டுபோன வரன்முறையை மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றார்[20]. அவருடைய நம்பிக்கை வீண் போகாது என்பதனையே எமது அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் கந்தரோடையுடன் இணைக்கப்பட்டிருந்த நகரமயமாக்கம் தொடர்பான இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளன. கந்தரோடை என்ற வரலாற்று ஆக்க கால நகரமையத்திலிருந்து விஞ்ஞானரீதியாக

தொல்லியல் சான்றுகளை பெறமுற்படும் போது ஈழ – தமிழக வரலாற்றையே மாற்றியமைக்கக்கூடிய நிலை நிச்சயம் உருவாகும்.

மிகத்துல்லியமான முறையில் புராதன பழம்பெரும் நாகரிகமொன்றின் ஓர் இருப்பு பண்பாட்டு எச்சங்களைத்தேடும் மனிதர்களின் கண்களுக்குத் தெரிந்திருந்தும்கூட அதனை முறைப்படி வெளிக்கொண்டுவர முடியாத நிலையில் அந்நாகரிகத்தின் சான்றுகள் அழிவுக்குள்ளாக்கப்பட்ட மிகத் துர்ப்பாக்கியமான நிலை இலங்கைத்தீவில் நிகழ்ந்தது என்றால் அது யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் முத்துப்போல் காணப்பட்ட கந்தரோடையில் தான் நிகழ்ந்தது என்பதனை இன்று யாருமே மறுப்பதற்கில்லை. ஒரு புறம்போக்கான அரசியல் வரலாற்று-சமூக-பண்பாட்டு எல்லைக்குள்ளே - அதாவது யாழ்ப்பாணக்குடாநாடு என்ற புவியியல் எல்லைக்குள் கந்தரோடையின் அமைவிடம் காணப்பட்ட தன்மையின் காரணத்தினாலோ என்னவோ கந்தரோடை கைவிடப்பட்டு நீண்ட காலமாயிற்று. ஆனால் காலம் மிகவும் தாழ்த்தியே சிங்கள மற்றும் தமிழ் இலக்கியங்களில் கந்தரோடை பற்றிய குறிப்புக்கள் இடம்பிடித்துள்ளமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஒரு காகக்குடும்பத்தின் கதை கந்தரோடையை சிங்கள இலக்கியத்தினுள் சேர்ப்பித்தது. மாருதப்புரவீகவல்லி என்ற இளவரசியின் கதை கந்தரோடையை தமிழ் இலக்கியத்தினுள் சேர்ப்பித்தது. கி.பி.14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிங்கள நூலான நம்பொத்த காகக்குடும்பத்தின் கதையைக் கதிரகொடவுடன் இணைத்துக் கூறுகின்றது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை மாருதப்புரவீக வல்லியின் கதையைக் கதிரமலையுடன் இணைத்துக் கூறுகின்றது. ஆனால் கந்தரோடையின் தொல்லியல் முக்கியத்துவம் 1917 ஆம் ஆண்டில் தற்செயலாக வெளியரும்பிய புத்தர் சிலை ஒன்றினூடாக போல் E பீரிஸ் என்பவரால் கண்டுகொள்ளப்பட்ட நாட்களிலிருந்து உணரப்பட்டு, பௌத்த சிங்கள தேசத்திற்கு கந்தரோடையின் இருப்பு வெளிக்காட்டப்பட்டது. அன்றிலிருந்து இற்றைவரைக்கும் கந்தரோடை வெறுமனே ஒரு பௌத்த மையம் மட்டும்தான் என்று உணரப்பட்ட நிலையில், யாழ்ப்பாணக்கச்சேரியை நிர்வகித்த சிங்கள G.A.க்கள் தொடக்கம் இலங்கைத் தொல்லியற் திணைக்களமும் பௌத்தப்பண்பாட்டு ஆய்வாளர்களும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருந்ததனைக் காண்கின்றோம்.



290273

அதன்விளைவே கந்தரோடை தமிழ்மக்களது கவனத்தினை மிக நீண்டகாலம் ஈர்க்காது போனமைக்கான காரணமாக அமைந்தது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுடைய ஸ்தாபிதத்துடன் கந்தரோடை பற்றிய நோக்கில் பலமாற்றங்கள் நிகழ்ந்து வந்திருந்தமையை நாம் இப்பொழுது நன்றாக அறிகின்றோம்.

## கந்தரோடையை இணைத்துவைத்த வணிக வழிகள் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் பெருங்கற்காலப் படிமங்கள்:

தென்னாசிய நாகரிக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்த சம்பவமானது சிந்து மாகாணத்திலுள்ள லார்க்கான மாவட்டத்தில் பௌத்த ஸ்தூபி ஒன்றின் சிதலங்களை அகழ்ந்து வெளிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோது ஏற்பட்டதாகும்.. அதாவது சிந்துநதி நாகரிகக் கண்டுபிடிப்பிற்கு அடிப்படையாக விளங்கிய கட்டிடச் சிதைவாக விளங்கியதே அப்பௌத்த ஸ்தூபியாக அமைந்தது. இதேபோன்று கந்தரோடையில் மேற்பரப்பில் காணப்பட்ட பௌத்த கலாசார அழிபாடுகளின் எச்சங்களே வழுக்கையாற்றுப் பரப்பில் உள்ள வண்டல்மண் படிவுகளுக்குள் மறைந்திருந்த பெருங்கற்காலத் திராவிடக் கலாசாரத்தை வெளிக்கொணர உதவியிருந்ததென்றால் அதில் சந்தேகம் எழமுடியாது. போல் ஈ பீரிஸ் என்பவரே முதன்முதலாக வழுக்கையாற்றுப் பரப்பிலுள்ள தொல்லியல் எச்சங்களை நாடித்தேடி தனது ஆய்வு முயற்சியை கந்தரோடை தொடர்பாக 1917 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைத்தவராகக் காணப்படுகின்றார். பின்னர் 1971 ஆம் ஆண்டில் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலாபெக்லி 'விளாமரத்தடியில்' ஒரு பரீட்சார்த்த அகழ்வுக்குழி ஒன்றினைத் தோண்டி, விஞ்ஞானபூர்வமாக முதன்முதலில் பெருங்கற்கால மண்படையடுக்குகளை இனம்கண்டு கொண்டார். அவர் அவ்விளாமரத்தடிக் குழியிலிருந்தே செம்பினாலான முச்சூலமொன்றையும் அகழ்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் இரகுபதியின் தொல்லியல் மேலாய்வே கந்தரோடையில் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்புக்களை இனங்காண உதவியது எனலாம். வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கின் மீதான தொல்லியல் மேலாய்வின்போது ஆனைக்கோட்டையிலுள்ள

கரையாம்பிட்டி இடுகாட்டு மையம் அடையாளம் காணப்பட்டு அகழ்வாய்வுக்குட்படுத்தப்பட்டது (Rescue Excavation) பற்றி ஏற்கனவே இவ்வாய்வுக்கட்டுரையில் குறிப்பட்டுள்ளோம். 1980ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இவ்வகழ்வாய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் அதன் தலைவராக இருந்த பேராசிரியர் கா.இந்திரபாலாவின் தலைமையில் மேற்கொண்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வழுக்கியாற்றின் பள்ளத்தாக்கின் சங்கமப்பிரதேசத்தில் (அராலிப்பாலத்திற்கண்மையில்) மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாக பெருங்கற்கால மண்படையடுக்குகளிலிருந்து இரு மனித எலும்புக்கூடுகளும், உணவெச்சங்களும், பண்பாட்டுச் சான்றுகளும் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் ஓர் எலும்புக்கூட்டின் தலைப்பாகத்திற்கு அண்மித்த வகையில் கறுப்பு-சிவப்பு மண்பாண்டச் சட்டி ஒன்றுக்குள் முத்திரை மோதிரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தமையை அடையாளம் காண முடிந்தது. ஆண் எழும்புக் கூட்டுக்குரிய தலைப்பாகத்திலேயே இச் செம்பினாலான முத்திரை மோதிரம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (அம்முத்திரை(seal) Steatite என்னும் ஒருவகைக் கல்லினால் ஆனதென்றும், சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளும் Steatite என்ற அதேவகைக் கற்களினாலேயே செய்யப்பட்டவை என்றும் பேராசிரியர் கா. இந்திரபாலா குறிப்பிட்டுள்ளார்.) பெண் எலும்புக் கூட்டுக்குரிய தலைப்பாகத்திலும் ஏதாவது தடயங்கள் இருந்திருக்க வேண்டும். ஆய்வின்போது அத்தடயத்தினை மீட்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பிற்காலத்தில் இக்கட்டுரையாசிரியர் அத்தடயத்தினை மீட்பதற்கு பல தடவைகளில் முயற்சித்திருந்தும் அது கைகூடவில்லை).

ஆனைக்கோட்டையில் மீட்டெடுக்கப்பட்ட செம்பினாலான முத்திரையில் காணப்பட்ட ஈரின வரிவடிவம் தொடர்பாக கா.இந்திரபாலா, பொ.இரகுபதி, மைசூர் கல்வெட்டியல் நிபுணர் ரமேஸ் என்போர் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தபோதிலும், பொதுவாக அம்முத்திரையிலுள்ள வாசகத்தினை தமிழ்ப்பிராமி ஒலியன்களின் அடிப்படையில் வரும் "கோவேதம்" என்று ஏற்றுள்ளார்கள். அவ்வகையில் இலங்கையின் பெருங்கற்காலப் பண்பாட்டு மண்படையடுக்குகளில் இருந்து கிடைத்த வெண்கல உலோகத்தாலான

முதலாவது தமிழ்ப் பிராமி வாசகம் இதுவென்று குறிப்பிட முடியும். அத்தகையவொரு சிறப்பினை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும் அதனோடு இணைந்திருந்த பெருங்கற்காலக் குடியிருப்புக்களும் பெற்றிருந்தன. கந்தரோடை அக்கோவேதம் என்ற அரச பதத்திற்குரிய பின்புலமாக விளங்கியிருந்திருக்க வேண்டும் என்பதிலும் எவ்வித ஐயமும் எழமுடியாது. மகாவம்சம் நாகதீபத்தில் இருநாக அரசர்கள் தத்தமது அரசிறமையை நிர்ணயம் செய்வதற்காக (சிம்மாசனத்திற்காகப்) போரிட்டிருந்தனர் என்ற செய்தியையும் தருவதிலிருந்து கோவேதம் முத்திரை வாசகத்தின் பொருளை, அதன் தொல்லியல் முக்கியத்துவத்தினை இங்கு உறுதிசெய்து கொள்ள முடிகிறது.

வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கில் மிகவும் அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்த தொல்லியற் கருவூலமாக சாணைக்கல் அம்மியும் குழவியும், திராவிடப் பண்பாட்டு ரீதியாக வரலாற்று முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. அதாவது பெருங்கற்கால சிற்பக்கலை வடிவங்களுள் ஒன்றான பன்றியின் உருவவியலை அடிப்படையாகக் கொண்ட இச்சாணைக்கல் அம்மியானது நான்கு கால்களைக் கொண்டும் ஒரு விளிம்பில் வரைபு ஒன்றினையும் கொண்டும் முச்சூலக் குறியீடு ஒன்றினைக்கொண்டும் காணப்படுவது ஆதித்திராவிடப் பண்பாட்டின் அடிப்படை மூலத்தினை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது. சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமொன்றில் பயிலப்பட்ட வரைபு முறையொன்று, மிக நீண்ட பிரதேசங்களையும், காலத்தினையும் கடந்து வந்து வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள கந்தரோடையில் உள்ள "கற்பொக்கணை" என்ற மையத்தில் புதைந்திருந்த சாணைக்கல் அம்மியில் பதியப்பட்டிருந்தமையே ஆதித்திராவிட பண்பாட்டு மூலமொன்றின் சிறந்த வெளிப்பாடாக அமைந்தது எனலாம். நிலைக்குத்தாக நோக்கும்போது படகு ஒன்று பாய்மரத்துடன் காணப்படும் தோற்றத்தினையும், பக்கவாட்டாக நோக்கும்போது மீன்தலைவரிசை ஒன்றின் தோற்றத்தினையும் கொண்டு காணப்படும் இவ்வரைபானது சிந்துவெளி முத்திரைகளில் பெருமளவுக்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளவையாகக் காணப்படுகிறது. இவ்வெச்சத்தின் அடிப்படை யிலிருந்து புராதன நதிப்பள்ளத்தாக்கு நாகரிகமொன்று வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கின் முத்தான கந்தரோடையின் அடித்தளத்தில் மறைந்திருப்பதனை நாம் இனியாவது உணரவேண்டும்.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் கந்தரோடை என்ற மையமானது ஆற்றின் இரு புறங்களிலும் சமத்துவமான முறையில் கட்டிட, நிறுவன அலகுகளைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தமையை தொல்லியல் மேலாய்வுகளின்போது அவதானிக்க முடிந்தது. ரோமானிய வாணிபக்கிடங்கு இரண்டு வழுக்கையாற்றுக்கும், தற்போதைய உடுவில் குளத்திற்கும் மற்றும் மாசியப்பிட்டிச்சந்தைக்குமிடையே இடையே காணப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன. புராதன தோணித்துறை ஒன்றினை "திரும்புதுறை" என்ற பரப்பு கொண்டிருந்தது என்பதற்கான தடயங்களும் கிடைத்துள்ளன. இப்பிராந்தியம் தற்போதைய உடுவில் குளத்தின் ஒருமுனையைக் குறிப்பிட்டு நின்றதெனலாம். புதைந்துபோன மரத்தோணியின் பல பாகங்கள் இங்கிருந்து மீட்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உரோம வியாபாரிகளினுடைய நாணயங்கள் பெருமளவிற்கு வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிற்குக் கிழக்குப் புறமாகவே சிதறிக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையாசிரியருக்கு ரோமத்தங்க நாணயம் உட்பட பல ரோம நாணயங்கள் தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு அருகில் உள்ள புராதன நிலப்பரப்பில் உள்ள வயிரவர் ஆலயச் சுற்றாடலில் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இப்பரப்பானது சுதேச வைத்திய பாரம்பரியத் தளமாக மிக நீண்ட காலமாக விளங்கி வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது).

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிற்கு மேற்குப்புறமாக மாசியப்பிட்டி பொதுச் சந்தைக்கு அருகாமையில் மிகப் புராதனமான சிவன்கோயில் ஒன்றின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அருகே மிகப்புராதனமான அங்கண்ணம்மைக் கடவை (அங்கணாவைக்கடவை) கண்ணகியம்மன் ஆலயம் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இக்கோவிலிலுள்ள திருக்குளக் கட்டில் முதலாம் கஜபாகுவின் கற்சிலை 19ஆம் நுாற்றாண்டு முடியவுள்ள காலம் வரைக்கும் காணப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.)

துறையும்,தோணியும்,பரதவர் குலமும்,மீன் செல்வமும் இணைந்த வகையில் பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வு முறைகளிலிருந்து முகிழ்ந்த பழந்தமிழர் பாரம்பரியத்தினை மிகத் துல்லியமாகக் காட்டி நிற்கின்ற வழுக்கையாற்றுப்பரப்பே தமிழ்ப்பிராமி வரிவடிவங்களை

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கந்தரோடைக்கும், வெளியே தமிழகத்திற்கும், செங்கடல் மார்க்கத்திலமைந்த வர்த்தக மையங்களுக்கும் வழங்கியிருந்த நிகழ்வினை எதிர்கால அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டும் என்பதில் சந்தேகம் எழமுடியாது. கந்தரோடையிலுள்ள மையமொன்றிலிருந்து (உச்சாப்பனை) அகழப்பட்ட குழியில் காணப்பட்ட என்பினாலான கத்தி போன்ற கருவியில் தீட்டப்பட்டிருந்த எருத்தின் உருவமானது மத்தியதரைக் கடலில் அமைந்துள்ள கிரீட்டன் தீவிலுள்ள நோஸஸ் (Knossos) என்ற நகரில் வரையப்பட்ட எருத்தின் தோற்றத்தினை ஒத்துள்ளது. எனவே மண்ணித் தலையுள்ளிட்ட பூநகரிப் பிராந்தியத்தின் வெளிநாட்டுத் தொடர்புகள் கி.மு. 1500 ஆண்டுகளிலிருந்தே ஆரம்பித்து விட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

## ஆந்திர வணிக கணங்கள் (அமராவதி - நாகர்ச்சுனகொண்டா – பலூர் - கந்தரோடை)

கந்தரோடையுடன் கிறிஸ்தவ சகாப்தத்தின் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் வாணிப வழிகளை ஏற்படுத்தி நின்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிராந்தியமாக ஆந்திரப்பிரதேசம் காணப்படுகின்றது. வடஇலங்கையுடன் மிகநெருக்கம் வாய்ந்த வணிக-பண்பாட்டு உறவுகளைப் பேணிவைத்திருந்த கிருஸ்ணா நதிப்பள்ளத்தாக்குப் பிராந்தியமானது வெள்ளை-மாபிள் கற்களினாலான புத்தர் சிலைகளை கந்தரோடைக்கு வணிகப்பரிவர்த்தனையூடாக வழங்கியமையை மாத்திரமன்றி, முதன்முதலாக நகரக்குடியேற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமையைக் காண்கின்றோம். கந்தரோடைப் பிராந்தியத்திலுள்ள சில குறிச்சிப்பெயர்கள் ஆந்திரப் பிரதேசத்து வாணிகர்கள் குடியேறி வாழ்ந்திருந்தமைக்கான சான்றுகள் ஆகின்றன. அவ்வணிகர்கள் பயன்படுத்தியிருந்த ஏராளமான நாணயங்கள் புராதன கந்தரோடை நகரில் புழக்கத்திலிருந்தமையை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. தக்கணத்தின் முதற்பேரரசாக விளங்கிய சதவாகனப்பேரரசு வடஇலங்கையில் மகாயானப் பௌத்தப்பண்பாட்டை தமிழ்ப்பண்பாட்டுடன் இணைத்தவகையில் கந்தரோடையில் நகரக்கட்டுமானத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளது.

ஆந்திரர்களுடைய தோற்றமானது எவ்வாறு பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுடைய வளர்ச்சி நிலையிலிருந்து எடுத்துக் காட்டப்படுகின்றதோ அதேபோன்று ஒருநிலையை கந்தரோடையில் பிற்காலகட்டத்தில்(கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து) பௌத்தமத வழிபாட்டு முறையையும் தழுவியிருந்த மக்களுடைய தோற்றமும் பெருங்கற்காலப் பண்பாட்டு நிலைகளிலிருந்து திட்டவட்டமாக எடுத்துக்காட்ட முடியும். இத்தகையதொரு முடிவானது திராவிடர் களுக்கும் பௌத்த மதத்துக்குமுள்ள இறுக்கமான தொடர்பினை இனங்காணவும் உதவும் (மணிமேகலையில் வருகின்ற ஆபுத்திரன் கதையில் மணிபல்லவம் தொடர்பாகக் கொடுக்கப்பட்டுள்ள விபரணங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சவஅடக்க முறைகளை நினைவுகூர வைப்பதனைக் காணலாம்).கந்தரோடையில் இன்று நாம் காண்கின்ற ஸ்தூபி போன்ற கும்மட்ட வடிவங்கள் யாவும் பெருங்கற்பண்பாட்டு சவ (ஈம) அடக்கங்களேயாகும்.

ஆந்திரர்களே முதன்முதலாக பிராகிருதத்தினையும் தமிழ் மொழியினையும் பிராமிவரிவடிவினை (Brahmi script) உபயோகித்து ஒரே நாணய வெளியீட்டில் பரிவர்த்தனை செய்திருந்தனர் ( Bilingual Coinage system).தென்னிந்தியாவில் உரோமானிய வர்த்தகர்கள் வெளியிட்டு வைத்த நாணய வடிவங்களைப் பின்பற்றியே (Cut out style) ஆந்திரர்களும் தமது நணய வெளியீடுகளை மேற்கொண்டிருந்தமையைக் காண்கின்றோம். காசு என்ற சொல்லினை முதன்முதலாகப் பயன்படுத்தியவர்கள் ஆந்திரர்களே. சந்தைகுட்டி என்ற பதமும் ஓர் ஆந்திரப்பிரதேசச் சொல்லாகும். மாசியப்பிட்டிச் சந்தையில் இச்சொல் இன்றும் வழக்கிலுள்ளது. சந்தைகுட்டி என்றால் சந்தையில் வரி சேகரிப்பவரைக் குறிக்கும். எனவே கந்தரோடையினுடைய நகராக்கமானது பெருங்கற்காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து வந்த நாகர்-ஆந்திரர் கூட்டு வாணிகத் தொடர்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, கட்டியெழுப்பப் பட்டதென்றே குறிப்பிட வேண்டும்.

கிரீட்டன் தீவு வழிவந்த வாணிபத் தொடர்புகள்

மற்றுமொரு தொல்லியல் மூலாதாரமாக அகழ்வினூடாக கந்தரோடையிலிருந்து கிடைத்துள்ள அரும்பொருள் எருத்துருவம் வரையப்பட்டுக் கிடைத்துள்ள எலும்பினாலான கத்தி போன்ற ஒரு கருவியாகும். இக்கருவியின் இரு விளிம்புகளில் ஒரு பக்கம் கத்தி போன்ற கூர்மையான இயல்பினையுடையதாகக் காணப்படுகின்றது. ஒன்றரை அங்குலமான அதன் ஒரு பக்கப்பரப்பில் நீண்ட எருத்து வடிவம் ஒன்று வரையப்பட்டுள்ளது. வரையப்பட்ட இவ்வெருத்தின் தோற்றமானது மத்திய தரைக்கடலில் உள்ள கிரீட்டன் தீவில் காணப்படும் நோஸஸ் நகரில் வரையப்பட்ட எருத்தின் வடிவத்தையொத்துக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. 1995 இல் கந்தரோடையில் உச்சாப்பனை என்ற இடத்தில் மேற்கொண்ட அகழ்வின் போதே இவ் வரும் பொருள் கிடைக்கப்பபெற்றது. வரலாற்றுக்கு முற்பட்ட கால கட்டத்திற்குரியதாகக் கருதப்படும் இத்தொல்லியல் எச்சமானது பண்பாட்டடிப்படையில் நாகர் மரபினரின் தோற்றத்தினைக் கண்டுகொள்வதற்கும் உதவும் ஒரு வரலாற்று மூலமாகப் பயன்படுத்த முடியும். இத்தகைய ஒரு வரைப்பு மரபு கந்தரோடையில்இன்றும் தொடர்வதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது பசுமாடுகளுக்கு குறி சுடும் மரபில் காணப்படும் ஒரு குறியீடான சேதுவடிவமேயாகும். யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்து சேது நாணய வெளியீட்டில் காணப்படும் அதே வடிவத்தினை இற்றைவரைக்கும் கந்தரோடையில் உள்ள நெல்வயற் செய்கையாளர்கள் தத்தமது பட்டிகளுக்கு (மாடுகளுக்கு) குறி சுடுவதனூடாகப் பேணி வருவதனை இக்கட்டுயைாசிரியர்(நுலஅ றவைநௌள) நேரடியாகவே கண்டுள்ளார். இவ்வாறான தொல்லியல் மற்றும் பண்பாட்டு மானிடவியற்சான்றுகளின் அடிப்படையில் நாகர்வம்சப் பாரம்பரியப் பின்னணியில் நாகரதும் அம்மக்கட் கூட்டத்தின் அரச இலச்சினையாக சேது வடிவம் இலங்கையில் பேணப்பட்டு வந்திருந்தமையைக் காண்கின்றோம். இப்பின்னணியில் நாகர்வம்சத்தினரது ஆட்சிக்காலத்தில் இந்துசமயப் பண்பாட்டில் அவர்களுக்கிருந்த தொடர்புகள் மிகத் தெளிவாக – துல்லியமாக வெளித்தெரிவதனைக் காண்கின்றோம். சிவ வழிபாடே அவ்வம்சத்தினரின் மிகப் பிரதானமான சமயவெளிப்பாடாக அமைந்திருந்தது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. சதுரமான செம்பு நாணயமொன்றில் “சிவ” என்ற வாசகம் தமிழ்ப்பிராமி வரிவடிவில் பொறித்திருக்கக் கண்டெடுக்கப்பட்ட நிகழ்வு 1995 இல் கந்தரோடை

அகழ்வின் போது ஏற்பட்டது. இந்த நாணயம் நாகமன்னன் ஒருவனால் வெளியிடப்பட்டது என்பதும் தற்போது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கந்தரோடையைத் தலைநகராகக் கொண்ட நாகர் வம்சத்தினர் நாகதுவீபத்தில் சிவவழிபாட்டு மரபுகளையே வளர்த்தெடுத்திருந்தனர் என்ற தெளிவான முடிபினை கண்டு கொள்ள முடிகிறது.

**அரிக்கமேடு - ஆவரம்பிட்டி – கந்தரோடை**

கந்தரோடையில் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட தொல்லியலகழ்வாய்வின் அடிப்படையில் அப்பிரதேசத்து மட்பாண்டங்களின் தன்மை, தொன்மை பற்றி அறியக்கூடியதாகவுள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகத் தொல்லியலாளர் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட வகைகளை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்து தமது ஆய்வினைச் செய்துள்ளனர். இதில் முதலாவது வகையினை "A" என வகுத்துள்ளனர். இவ்வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களின் கழுத்து வளையங்கள் (Rim) ரோமச்சிவப்பு நிறத்தினை (Roman Red) கொண்டு விளங்குகின்றன. இவ்வகையான மட்பாண்டங்களை தென்னிந்திய அரிக்கமேட்டு மட்பாண்ட வகைகளில் இருந்து வேறுபடுத்தியுமுள்ளனர்.

இரண்டாவது 'B' வகையான மட்பாண்டங்களை கறுப்பு-சிவப்பு வர்ண மட்பாண்டங்கள் என வகுத்துள்ளனர். இவை பெருமளவுக்கு தென்இந்திய பெருங் கற்காலப் பண்பாட்டு மக்களுக்குரிய மட்பாண்ட வகைகள் எனவும் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையான மட்பாண்டங்கள் தென் இந்தியாவில் அரிக்க மேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களை ஒத்துக் காணப்படுகின்றன எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இவ்வகையான மட்பாண்டங்களின் பரவலான உபயோகமானது தென் இந்தியாவில் இரும்பின் உபயோகத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது தொல்லியலாளரின் கருத்தாகும்.

கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் 'கிராபிடிக் குறிகள்' (Graffiti Marks) இருப்பதனையும் அவதானிக்க முடிந்தது. இது மட்பாண்டத்தின் அலங்கார வேலைப்பாடுகளையே குறிக்கும் என்பது ஒரு சாரரது கருத்தாகும். இக்குறியீடுகளானவை

மட்பாண்டம் செய்யும் குழுவினருடைய குறியீடுகளே என்பது இன்னும் சிலரது கருத்து. தென் இந்தியாவில் அரிக்கமேட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் கிராபிடிக் குறிகள் அதிகளவில் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் பற்றி தென்னிந்திய தொல்லியல் அறிஞர்கள் பல்வேறுவகையான ஆய்வுகளைச் செய்து வருகின்றனர்.

## சங்ககாலத்தமிழகத்துடனான வாணிபத்தொடர்புகள்

சங்ககால இலக்கியப் பரப்பில் நாகவம்சத்தைச் சேர்ந்த பல புலவர்களது பெயர்கள் இடம்பெற்றிருப்பது இப்பொழுது எமக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக அமைகின்றது. ஈழமுடி நாகராயர், ஈழநாகன், ஈழ நாகராயர், பூநாகன், குறுநாகன் போன்ற பெயர்கள் நாகதுவீபத்தைச் சேர்ந்தவை என எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. சங்ககால முடியுடை மூவேந்தரின் ஆட்சிப் பரப்பிற்குள் காணப்பட்டிருந்த குறுநில மன்னர் போன்றே சிற்றரசராக நாகர்களும் நாகதுவீபத்தில் ஆட்சி செய்திருந்தனர் என்பதனை இப்பொழுது இந்நாணய வெளியீடுகள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது. இதேபோனறு மணிமேகலையில் உள்ள பல செய்திகள் குறிப்பாக மணிபல்லவம் தொடர்பாகக் கிடைத்துள்ள செய்திகளுடன் நாக அரசர்களைப் பற்றிய செய்திகளும் இணைக்கப்பட்டுக் கூறப்பட்டுள்ளமையானது நாகவம்சத்தினரது அரசமுறைமையுடன் தொடர்புபட்ட வகையிற் கிடைத்த தொல்லியற் சான்றுகளுடன் இணைத்த வகையில் ஆராய்ந்துகொள்வதற்கு வாய்ப்பினைத் தருகின்றது. பாளிமொழியில் ‘நகதிவ’ எனக் குறிப்பிடப்பட்ட நாகதீபம் பற்றிய வரலாற்றுத் தொடக்கத்தினை நாகமன்னர்களுடைய ஆட்சிமுறைமையுடன் ஆரம்பிக்க வேண்டும் என்பதனையும், அவர்கள் திராவிட நாகர்களே என்பதனையும் இக்குறிப்பிட்ட நாணய வெளியீடுகள் வாயிலாக உறுதிப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது.[21]

நாக முத்திரைகள் பொறிக்கப்பட்ட மூன்று மட்பாண்டத்துண்டுகளை சூளைப்பகுதியில் இருந்து மீட்டெடுக்க முடிந்தமையானது வாணிபத் தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கேற்ற வழிவகைகளைத் தெளிவாக்கியுள்ளது. வட்டவடிவமான இம் முத்திரைகள் தனித்துவமான வகையிற் தோற்றமளிப்பது ஒருபுறத்தில்

அதிகாரபூர்வமான உற்பத்திமுறை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் மறுபுறத்தில் ஏற்றுமதிக்குரிய தரத்தினை நிர்ணயம் செய்யும் குறியீடாகவும் உபயோகிக்கப்பட்டது என்பதனையும் அவை உறுதிப்படுத்துவதாக அமைகின்றன. சிவப்பு வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களில் சூளையிட்டுச் சுடுவதற்கு முன்னமே இத்தகைய முத்திரைகள் பதிட்டம் செய்யப்பட்டிருந்தன என்பதனை செய்முறைகள் எடுத்துக்காட்டுகின்றன. உள்வட்டம் வெளி வட்டம் என்பவற்றுக்கிடையே உற்ற இடைவெளியில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுக் காணப்படுவது அத்தகைய மட்பாண்டங்களினது காலவரையறையை நிர்ணயம் செய்துகொள்வதற்கு உதவுவதாக உள்ளது. வட்டத்தின் மையப்பகுதியில் நாகவடிவம் பொறிக்கப்பட்டுக் காணப்படுவது அதன் சிறப்பியல்பாகவும், வரலாற்றுக்கு முக்கியத்துவம் உடையதாகவும் அமைந்து விடுகின்றது.

நாகமுத்திரைகள் பொறிக்கப்பட்ட இச்சிவப்பு மட்பாண்டங்கள் வாணிப நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதனை அவை மீட்டெடுக்கப்பட்ட நிலைகளை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிட்டுக்கொள்ள முடிகிறது. சங்ககாலத் தமிழகத்துடனான வாணிபத் தொடர்புகளுக்கு அச்சாணியாக விளங்கிய ரோமாபுரி வியாபாரிகள் தமது பிரதிநிதிகள் ஊடாக இப்பிராந்தியத்திலும் (வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கிலும்) வாணிப முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர் என்பதனை இங்கு கிடைத்துக் கொண்டிருக்கும் ரோமன் ரௌலெட்டட் மட்பாண்டங்களும் ரோம நாணயங்களும் உறுதிப் படுத்துகின்றன. சேரநாட்டுப் பிரதிநிதிகளே ரோமாபுரி பெரு வர்த்தகர்களையும் ஈழத்து வியாபாரிகளையும் இணைத்து வைத்த வணிகர்களாவர். சிலப்பதிகாரம் - மணிமேகலை போன்ற நூல்கள் இவற்றுக்குச் சிறந்த சான்றுகளை வழங்குகின்ற இலக்கிய மூலங்களாகவும் உள்ளன. கந்தரோடையைப் பொறுத்தவரையிலும் சேரநாட்டு வாணிபப் பிரதிநிதிகள் ஊடாக தமிழகத்தினூடான பொருளாதாரப் பரிவர்த்தனை மேற்கொள்ளப் பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகளும் கிடைத்துள்ளன. அந்தவகையில் முத்திரையிடப்பட்ட இச்சிவப்பு மட்பாண்டங்கள் ஏற்றுமதி நோக்கத்திற்கான தரநிர்ணயத்தை உறுதிப்படுத்தி நிற்கும் அதேநேரத்தில் அரசமுறமை ஒன்று வளர்ச்சி பெற்றிருந்த வகையினையும் பக்கம் பக்கமாக உறுதிப்படுத்தி நிற்கின்றன எனலாம். இந்த அம்சம் மேலும் விரிவாக ஆராயத்தக்கதாகவும் உள்ளது.

தமிழகத்திற்கும் கந்தரோடைக்கும் இடையே காணப்பட்டிருந்த வாணிபத் தொடர்புகளை மிகவும் தெளிவாக சான்றுகாட்டி நிற்கின்ற மூலங்களாக சங்ககாலப் பாண்டியன் பெருவழுதியின் சதுர நாணயங்கள் காணப்படுகின்றன. 1956ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையொன்றில் பாண்டியன் பெருவழுதியின் இரு நாணயங்கள் (மீன் சின்னத்துடன் கூடியவை) 'பௌத்த சக்கர வகை' எனப் பெயர் சூட்டப்பட்டு வெளியிடப்பட்டமையைக் காணலாம். அதேவகையான நாணயம் ஒன்று இப்பொழுது எமக்குக் கிடைத்திருப்பது தமிழகத்தில் கிடைத்த பாண்டியர் நாணயங்களுடன் ஒப்பிட்டு நோக்கிக்கொள்ள வாய்ப்பினை அளித்துள்ளது. அண்மையில் தமிழகத்திலிருந்து வெளியான பாண்டியர் நாணயங்கள் என்ற ஆய்வுநூல் ஒன்றில் இதேவகையான நாணயமும் வெளியிடப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது. சங்க காலத்தைச் சேர்ந்த வேப்பங்காய் நெல்லிக்காய் போன்ற உருண்டை வடிவமுடைய நாணயங்களும் கந்தரோடையிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. இவை தொடர்பாக அறிஞர்கள் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளனர். இவை யாவுமே வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு பிராந்தியத்திற்கும், தமிழகத்திற்குமிடையிலான வாணிபத் தொடர்புகளை மிகத் தெளிவாகக் காட்டுகின்ற சான்றுகளாகும்.

சங்ககாலத் தமிழகத்துடனான தொடர்பின் நிமித்தமாக வழுக்கையாற்றுப் பிராந்தியத்தில் ஏற்பட்ட செல்வாக்கு நிலைகளை அங்கு வழங்கிக்கொண்டிருக்கின்ற பல இடப்பெயர்கள் இன்றுவரை வெளிப்படுத்தி நிற்பதனையும் காணலாம். சிறப்பாக கந்தரோடைப் பிராந்தியத்திலுள்ள குறிப்பிட்ட மையங்களின் - குறிச்சிகளின் பெயர் வரிசையில் சங்கம் புலவு, தில்லையங்கூடல், கயல்கண்ணி, அங்கண், அம்மைக்கடவை, உச்சாப்பனை, பருத்தியாவோடை (பருத்தியோடை), திரும்புதுறை போன்றன இங்கு ஆய்வுக்கெடுத்துக்கொண்ட பகுதிகளாகவுள்ளன. சங்கம் புலவு என்ற குறிச்சியானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியற் சான்றுகளை ஈந்தவண்ணமுள்ளது. மிகப் பழமைவாய்ந்த ஈம அடக்க முறையைக் கொண்டுள்ள இம்மையத்தில் இருந்து பழமைவாய்ந்த நாகலிங்கம் ஒன்று அண்மையில் கண்டெடுக்கப்பட்டது. மஞ்சள்நிறக் கலவையினாலான – கல்வகையை ஒத்தவகையில் இந் நாகலிங்கம் காணப்படுகின்றது. திருக்காம்புலியூர் அகழ்வாய்வின்போது கிடைத்த நாகலிங்க வடிவத்தினை இது பெரிதும்

ஒத்துக் காணப்படுவதும், குடிமல்லத்தில் கிடைத்த லிங்கத்தின் வரைபுகளை ஒத்தவகையில் இந் நாகலிங்கம் விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விடயம் தொடர்பாக மேலும் ஆராய இட முண்டு.

கந்தரோடை பற்றிய ஆய்வில் இனத்துவ அரசியல் நிலை மேலோங்கிக் காணப்பட்டு வந்தமையின் பின்னணியில் அம்மையத்தினுடைய பிராந்தியத் தொல்லியல் முக்கியத்துவம் இழக்கப்படுவதற்குக் காரணமாயிற்று. இலங்கைத்தொல்லியற் திணைக் களத்தினால் கந்தரோடை எந்தவிதமான ஆய்வுகளுக்கும் உட்படுத்தப் படாமல் நெடுங்காலமாக கைவிடப்பட்டமைக்கான காரணம் என்ன என்று ஒருவர் ஆராயும்போதே அந்த இனத்துவ அரசியலின் தார்ப்பரியம் புரியும். திராவிடப் பண்பாட்டு மையமாக கந்தரோடை காணப்பட்டதன் காரணத்தினாலேயே தொல்லியற் திணைக்களம் அப்பிராந்தியத்து அகழ்வாய்வினை முன்னெடுக்க விரும்பவில்லை. ஆனால் அங்கு காணப்படும் பௌத்த எச்சங்களை சிங்கள பௌத்த எச்சமாகக் காட்டுவதற்கு ஏற்ற பகீரதப்பிரயத்தனங்கள் நடை பெற்றுவருவதனைக் காண்கின்றோம். சமுதாய நல்லிணக்கங்களை உருவாக்கி, இலங்கைத் தீவில் சமாதான-சகவாழ்வினை ஏற்படுத்த விரும்புவபர்கள் கந்த ரோடையை இனக்காழ்ப்பற்ற ரீதியில் அணுகி, அதனை ஒரு சர்வதேசப் பண்பாட்டிற்குரிய தொல்லியல் மையமாகப் பிரகடனப்படுத்தும் பட்சத்தில் கந்தரோடையினுடைய யதார்த்தமான பண்பாட்டு உள்ளடக்கமானது தொல்லியலுக்குரிய இலக்கணங்களுடன் வெளிப்படுத்தப்படுவதற்கு சந்தர்ப்பமேற்படும். சர்வதேசத்தரம் வாய்ந்த தொல்லியற்குழுக்களினால் கந்தரோடை அகழ்வாய்வற்குட்படுத்தப்படும் சந்தர்பத்திலேயே அங்கு புதையுண்டுபோன சமுத்திரவியல் நாகரிகம் சிதலமடையாது வெளிவரக்கூடிய சாத்தியம் ஏற்படும். அந்நாட்கள் வரும்வரைக்கும் நாமும் பொறுத்திருப்போமாக.

## வாழ்வியற் பரிமாணம் -கட்டம் ஐந்து
## வடஇலங்கைக்கு நாகர் வம்சம் வழங்கிய வாழ்வியற் கோலங்கள்

இலங்கைத்தீவின் வரலாற்று வரைபியலில் (Historiography of Sri Lanka) அடிப்படையான சில மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இவ்வேளையில் மேலைத்தேயப் பார்வையிலிருந்து நோக்கப்பட்ட வரலாற்று முறையியலுக்குப் பதிலாக சுதேசிய நோக்கியலமைந்த ஒரு வரலாற்றுப் பார்வை இப்பொழுது பதியப்பட்டுக் கொண்டிருப்பதனைக் காணமுடிகிறது. பெரும்பாலான சிங்கள வரலாற்றாசிரியர்கள் இப்பொழுது நாகர் இன மக்களை இலங்கைத்தீவின் வரலாற்றைத் தொடக்கி வைத்த முதன் மக்களாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். நாகர் அமானுஷ்யர் அல்லர் எனவும், இலங்கைத்தீவின் தொடக்க கால வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தோற்றப்பாட்டிற்குரிய பிதா மகர்கள் இவர்களே என்பதனையும் இலங்கை வரலாற்றாசிரியர்களால் இப்பொழுது சான்றுகளுடன் எடுத்துக்காட்டப்படுகிறது. அண்மைக்காலங்களில் ஏற்பட்ட தொல்லியல் மேலாய்வுகள், மற்றும் அகழ்வாய்வுகளின் வளர்ச்சியின் பின்னணியில் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டெச்சங்கள் நாகர் மரபினரின் இருப்பு, செறிவு மற்றும் சமயப் பின்னணி போன்ற பல விடயங்களை எமக்கு தெளிவுபடுத்தியுள்ளன. கௌதம புத்தரின் வருகையின் பின்னர் குறிப்பாக 300 வருடங்களின் பின்னர் வடஇந்தியாவிலிருந்து மகிந்ததேரர் தரைமார்க்கமாக இத்தீவிற்கு வருகை தந்து தேரவாத பௌத்தமதத்தினை உத்தியோகபூர்வமாக அரச மதமாக்கியதோடு, சமகாலத்தில் இத்தீவில் காணப்பட்டிருக்கக்கூடிய அரச வம்சங்களையெல்லாம் தேரவாத பௌத்த நிறுவனங்களுக்குள் உள்ளீர்த்திருந்தமையைக் காண்கின்றோம். இலங்கைத்தீவில் தேரவாத பௌத்தமத நிறுவனங்களுடன் குறிப்பாக பொருளாதார – நீர்ப்பாசனவியல் நிறுவனங்களுடன் நாகர் வம்சத்தினர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக நாகர் வம்சத்தினரின் ஒரு பிரிவினர் பௌத்தர்களாக மாறிய அதேவேளையில் இலங்கையின் வடக்குக்கிழக்குப் பரப்பில் நாகவம்சத்தினர் தொடர்ந்தும் இந்து சமயத்தவர்களாகவே வாழ்ந்து, அரசமரபிலும் சமயபண்பாட்டு வாழ்விலும் செல்வாக்குச் செலுத்தி வந்திருந்தனர். நந்திச் சின்னமே நாகர்களது அரசமரபிற்குரிய சின்னமாக பின்பற்றப்பட்டிருந்தது என்பதனை

உறுதிப்படுத்தும் தொல்லியல் சான்றுகளும் இப்பொழுது கிடைத்துள்ளன.

தென்னாசியப் பண்பாட்டுருவாக்கத்திற்குப் பங்களித்த இனக்குழுமங்கள் பலவாகும். அவற்றுள் நாகர் இனம் மிகவும் தொன்மைவாய்ந்த ஒரு குழுமம் என்பதனை இலக்கிய, தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. தென்னாசியாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் இக்குழுமத்தினர் பல்வேறு காலப்பரப்பில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. வட இந்தியாவைப் பொறுத்த வரையில் வடகிழக்குப் பிரதேசத்திலுள்ள நாகலாந்து மாநிலமும், தென்னிந்தியாவில் கேரளமாநிலமும் நாகர் இனம் வசித்த பிரதேசமாகவும், நாகர் இந்தோனேசியாவில் யாவாத்தீவில் (நாகர் நாடு) நாகர் இனமும் அவர்களது பண்பாடும் புராதன காலத்தில் அரசியல் இறைமையுடன் வளர்ச்சி பெற்றிருந்தற்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள்ளன. இலங்கைத் தீவினைப் பொறுத்தமட்டிலும் நாகர் இனத்தினர் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பிலிருந்து வாழ்ந்து வந்தமைக்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள்ளன. கிழக்கிலங்கையில் இற்றை வரைக்கும் நாகர் வம்சமரபில் வந்த போடியார் பரம்பரையினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடபகுதி நாகதீபம் அல்லது நாகத்துவீபம் என மிக நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வந்த மரபினையும் காண்கின்றோம்.

இலங்கைத்தீவின் பூர்வீக மக்கள் குழுமங்களுள் நாகர் இனக்குழுமம் மிகவும் தனித்துவம் வாய்ந்த வாழ்க்கை முறை யொன்றினைக் கட்டமைத்து, முதன் முதலாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக – பொருளாதார நிறுவனங்களின் உதவியுடன் வாழ்ந்திருந்மைக்கான தொல்லியற் சான்றுகளை இப்பொழுது ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். தென்னிலங்கையிலிருந்து வட இலங்கை வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளும், அகழ்வாய்வுகளுமே நாகர் பற்றிய சமூக – பொருளாதார, சமயத்தரவுகளை எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ள மூலதாரங்களாகும். இப்பின்னணியிலேயே நாகர் வம்சத் தினரது தோற்றம், இன அடையாளம் பற்றிய குறியீடுகள், குழுமங் குழுமமான அவர்களது பரவல், இலங்கைத்தீவில் அக்குழுமத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டுக் கட்டுமானம், தேரவாத பௌத்தம் ஓர்

அரசியல் மதமாக கி.மு. 3ஆம் நூற்றாண்டில் உத்தியோகபூர்வமாக இங்கு அறிமுகப் படுத்தப்படும் வரைக்கும் முதுபெருங்கற் பண்பாட்டுச் சிற்பிகளாக அக்குழுமத்தினர் நீரியல்வள முகாமைத்துவத்தின் முகாமையாளர்களாக, குளச்சொந்தக்காரர்களாக, இடுகாட்டுப் பண்பாட்டுச் சடங்குதாரிகளாக, "காவல் தெய்வங்களை" குளக்கட்டுக்களிலும், வாணிபமையங்களிலும் நிறுத்தி, வளத்தினைப் பாதுகாக்க வைத்தவர் களாக வாழ்ந்திருந்த வகையினை மிகத்தெளிவாக எடுத்துக்காட்ட முடிகின்றது. இப்பின்னணியிலே இந்து சமய உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் இத்தீவில் நாகர் இனக்குழுமத்தினர் ஆற்றியிருந் திருக்கக்கூடிய பங்கும் பணியும் பற்றி ஆராய்கின்ற ஓர் அடிப்படையான நோக்கினை இக்கட்டமைப்பு கொண்டுள்ளது.

நாகர்கள் யார்? இவ்வினாவிற்கான விளக்கம் இங்கு அவசியமானது. நாகர் இனக்குழுமத்தினர் மத்திய தரைக் கடற்பிராந்தியத்தினைச் சேர்ந்தவர்களாக எடுத்துக்காட்டப்படுவதனைக் காண்கின்றோம். எகிப்திய நாகரிக காலத்திலிருந்து (கி.மு. 400 – கி.மு. 300) கிரீட்டன் தீவில் வளர்ச்சியடைந்த ஏஸியன் நாகரிகம் வரைக்கும் ( Agean civilization கி.மு. 1700 – கி.மு. 500) இவ்வினத்தினர் மத்தியதரைக்கடற் பிராந்தியத்தில் பன்னாட்டு வாணிப முகாமை யாளர்களாக தொழில் புரிந்திருக்கின்றார்கள். எகிப்துடன் இக்குழுமத்தினர் மேற்கொண்டிருந்த வாணிப நடவடிக்கைகளுக்குச் சான்றாக மட்பண்டங்களில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ள பிராமிச் சாசனப் பதிவுகள் விளங்குகின்றன. நாகர் குழுமத்தினர் கீழைத்தேயத்திற்கு மத்தியாசியாவினூடாகப் பரவி, ஸஸானியர்களுடைய (Sassanians) செல்வாக்கினையும் பெற்று, இணைந்த வாணிபத்தில் ஒன்றுபட்டு செயலாற்றியிருந்துள்ளார்கள் என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. கி.முற்பட்ட முதலாம் நூற்றாண்டிலிருந்து நாகர்கள் ஸஸானியருடன் இணைந்து வர்த்தகமுயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்டுள்ள கிராபிடிக் குறியீடுகளே சான்றாகவுள்ளன. இக்குறியீட்டு வரைபுகளில் ஸஸானிய வம்சத்தினரின் செல்வாக்கு உட்பட நாகர் குழுமத்தினருடான கைவண்ணமாக மட்பாண்டவரைபுகள் எமக்குக் கிடைத்துள்ளன. பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்ட முச்சூலக்குறிகள், நாற்சூலக்குறிகள் யாவும் ஸஸானிய வம்சத்தினரின் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டு நாகர் மயப்படுத்தப்பட்ட கிராபிடிக் குறிகளாகவே

உள்ளன. (ஆனைக்கோட்டை முத்திரைச்சாசனத்தில் பொறிக்கப்பட்ட ஈரின வரிவடிவத்தில் மேலேயுள்ள வரிவடிவம் ஸஸானிய மரபிற் குரியதாகவே காணப்படுகின்றது என்பதே எனது வாதமாகும்).

குறுணிக்கற்காலப் பண்பாட்டை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் நாகர்களேயாவர். இவர்களே பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய குழுத்தலமையதிகாரிகளாக சமூகத்தினை ஒழுங்குபடுத்தி, வாணிபக்குழுக்களை அமைத்து, முதலில் ரோமானியர் களுடனும், பின்னர் ஸஸானியர்களுடனும் கீழைத்தேயத்தில் பொருளீட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகப் பெருமக்களாவர். குஷாணப் பெருவம்சத்தினர் இப்பண்பாட்டினை மத்தியாசியப் பிரதேசத்திற்கு எடுத்துச் சென்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வம்சத்தினருடைய நாணயங்கள் இலங்கையின் முக்கியதுறைமுகங்களான மாந்தை, வல்லிபுரம், ஜம்புக்கோளப்பட்டினம், நாகர்கோயில்(கௌத்தன்துறை) கந்தரோடை (திரும்புதுறை) போன்ற மையங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன. கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து குஷாணியர்- ஸஸானியர் - நாகர் வாணிபக்கூட்டு நடவடிக்கைகள் இப்பிராந்தியத்தில் இடம் பெற்றிருந்தமைக்கான தொல்லியல் சான்றாதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன.

நாகர் இனத்தினரது தோற்ற மூலம் பற்றிய செய்திகளை வெளிக்கொணர முயற்சிப்பது சற்று கடினமான காரியமாகும். நாவலந்தீவு ஜலசமாதியுட் பிரவேசித்திருந்த காலத்திலிருந்து நாகர் இனம் நீரினுள் அமிழ்ந்து அழிந்தவை போக, எஞ்சியோர் மீதமாகக் காணப்பட்ட தரைப்பரப்பிற்கு நகர்த்தப்பட்ட நிலையிலேயே இன்று தென்னிந்தியா, இலங்கை, இந்தோனேசித் தீவுகளாகக் காட்சியளிக்கின்ற பிராந்தியங்களில் அன்று நிலை கொண்டிருந்ததாக செவிவழிமரபுகள் குறிப்பிடுகின்றன. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட பாரதம் உட்பட ஒரு பெருநிலப்பரப்பு இந்து சமுத்திரத்தினால் விழுங்கப்பெற்ற நிகழ்வின் இறுதியில், எஞ்சியிருந்து வாழ்ந்து, பின்னர் வரலாற்றுக்கால நாகர் இனமாக அரசோச்சி மறைந்த ஓர் இனக்குழுவினராகவே நாகர் இனத் தினை வரலாற்றாசிரியர்கள் இனம் கண்டு கொள்கின்றனர். தொலமி, ஸ்டிராபோ, இராசநாயகம் முதலியார் போன்றோரால் நாகர் இனம் தொடர்பான ஆரம்ப வரலாற்றுக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. இக்குறிப்புக்களின் அடிப்படையில் நாகர் இனம் வாழ்ந்த பூமி நாகநாடு,

நாகத்தீவு, நாகதீபம், நாகதுவீபம், நகதிவ, நாகதிவயின, மணிநாகத்தீவு, மணிபல்லவம், மணிநாகத்தீவு எனப் பலவாறாக பாளி, தமிழ் மற்றும் சிங்கள மொழி இலக்கியங்களில் பதியப்பட்டிருப்பதனைக் காண்கின் றோம்.

கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குரிய வல்லிபுரம் பொற்றகட்டுச் சாசனத்தில், "நகதிவ" என ஆந்திரமாகதி மொழிநடையில் பிராமி வரிவடிவ வாசகமாகப் பொறிக்கப்பட்டுள்ளமையை நோக்கும் போது, யாழ்ப்பாணக்குடாநாடு அக்காலகட்டத்தில் நாகதீபம் என்று அழைக்கப் பட்டிருந்தமையை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்திலும் "நகதிவ" என்ற சொல் இடம் பெற்றிருப்பதனைக் காண்கின்றோம். மணிமேகலையில் நாகதீபம், மணிபல்லவம் என்ற சொற்கள் யாழ்ப்பாணத்தினைக் குறிப்பதற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நாணயமொன்றில் "நாகபூமி" என தமிழ்ப் பிராமி வரிவடிவில் பொறிக்கப் பட்டிருந்தமையைக் காணும் போது இலங்கையின் வடபகுதி நாகருடைய தாயகமாக விளங்கியிருந்தமையை உறுதிப்பட எடுத்துக் கூறக்கூடியதாகவுள்ளது.

முற்பட்ட அனுராபுரகால அரசர்களுள் பெரும்பாலானோர் நாகர்வம்சத்தினைச் சேர்ந்தோரே என்பதனை ஆய்வாளர் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். வைத்திய கலாநிதி குச. சேவையர் ஈழநாகர் வம்சம் தொடர்பாக அரிய பல கருத்துக்களை வெளியிட்டிருப்பதனைக் காண்கின்றோம். விஜயன் வருவதற்கு முன்பும், பின்னரும் இத்தீவில் வாழ்ந்து வந்த நாகர் மரபினரில் அரச அதிகாரத்துடன் விளங்கிய ஒரு பிரிவினரே அனுராதபுர நகரின் தோற்றத்திற்கும் அதனை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த நீர்ப்பாசனவியல் தொழினுட்பத்திற்கும் அடிப்படையாக தொழிற் பட்டிருந்தமையை குச.சேவையர் தனது நூலினூடாக எடுத்துக்காட்டியுள்ளார்.

"The Land of Letters" என்ற அவரது நூல் நாகர் இனத்தினரது தோற்றம், பரவல், பண்பாட்டுப் பங்களிப்புக்கள் தொடர்பாக அறிவதற்கு உதவும் மிக முக்கியமான வரலாற்று மூலாதாரமாகும். சேவையர் தனது நூலில் நாகர் இனம் தொடர்பாகக் குறிப்பிடும் போது, "மகாவம்ச ஆசிரியர் கால வரன்முறையடிப்படையில் இருவேறு கால

கட்டங்களுக்குரியதாகவும் இருவேறு பண்பாட்டு மரபுகளுக்குரியதாகவும் காணப்பட்டிருந்த இருபெரும் வம்சப்பாரம்பரியங்களை ஒன்றாக்கி, சிங்கள இனத்தின் தோற்றம் பற்றிய கதையை உருவாக்கிவிட்டிருப்பதனைக் காணலாம்.... அவ்வாறு ஒன்றாக்கப்பட்ட வம்சமரபுகளில் நாகர் இனம் குறிப்பிடத்தக்கது" என விரிவாகத் தந்திருப்பது நோக்கத்தக்கது. இலங்கையில் நாகவம்ச ஆட்சியாளர் பலர் சிங்கள – பௌத்த இசைவாக்கத்திற்குள் உள்ளகப்படுத்தப்பட்ட தன்மையை உணர வைக்கின்ற முறையில் ஏராளமான தொல்லியற் சான்றுகள் இப்பொழுது கிடைத்த வண்ணமுள்ளன.

மகாவம்சம் குறிக்கின்ற விடயத்தின்படி, இயக்கர் குல அரசனான காலசேனனைக் கொன்றே ஆரியனான விஜயன் அரசு பீடம் ஏறியதாக குறிப்பிட்டாலும், அவ்வாறான ஒரு முக்கிய அரசியல் கைமாற்றத்தின் பின்னணியில் நாகவம்சத்தினரது அரசியல் மேலாதிக்கம் முற்றிலுமே மகாவம்சத்தினால் மறைக்கப்பட்டிருப்பதனை எவருமே மறுக்க முடியாது. நாகவம்சத்தினரது ஆட்சி பௌத்த மதத்தின் வருகைக்கு முன்னர் இலங்கையின் கடல் முகப்புப் பிரதேசங்களில் நிலைபெற்றுவிட்டிருந்த வரலாற்றை மறைப்பதற்காகவே கௌதம புத்தரது மும்முறை வருகையை எடுத்துக்காட்டி, ஐதீக மரபுரிமையாகப் பெற்றுக்கொண்ட விஜயன் பற்றிய செவிவழிமரபிற்கு இலக்கிய வடிவம் கொடுத்து, இலங்கைத் தீவினை "விஜய" வருகையாளருக்குச் சொத்துடமையுமாக்கிய சிறப்பு மகாவம்ச ஆசிரியரான மகாநாம தேருக் குரியதாகின்றது. இவ்விடத்திலேயே மறைக்கப்பட்டுப்போன நாகர் வம்ச வரலாற்றை மூலாதாரங்களுடன் விரித்துரைக்க வேண்டியதாகின்றது.

"……….. விஜயனின் 35 ஆண்டுக்கால ஆட்சியின் பின்னர் அவனது தம்பி மகனான பந்துபாசு தேவவும் (கி.மு. 444 – 414) அதன் பின் பந்துபாசுதேவனின் மைத்துனனான அபயனும் (கி.மு 414 – 399) ஆட்சி புரிகின்றனர். விஜயன் முதல் அபயன் வரை இம்மூவரும் அனுராத புரியை இராசதானியாகக் கொண்டிருக்கவில்லை. இம்மூவரினதும் இராசதானி எங்கு அமைந்திருந்தது என்று யாருக்கும் தெரியாது ………"

290273

"அபயனின் பின்னர் விஜயனின் பேரரான பந்துகாபயன் (கி.மு 377 – 307) ஆட்சிப்பீடமேறுகின்றான். அவனே முதன்முதலாக

சான்றுகள் கிடைத்துள்ளன. துட்டகைமுனுவின் படைகளில் சேவையாற்றிய தமிழ்ப்படைத்தளபதிகள் பலர் ஜாவாத்தீவைச் சேர்ந்த நாகர்களே என்பதனை செ.பரணவிதானவும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். கதிர்காமப் பிரதேசத்தில் கிடைத்த ஆதிப்பிராமிக் கல்வெட்டு ஒன்றில் "ஜாவநாயர்" எனப் பொறிக்கப்பட்டிருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும்.[22] எனவே தேவநம்பிய தீசனுக்குப் பின்னர் வட்டகாமினியின் ஆட்சிக்காலம் வரைக்கும் அனுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாகமரபினரது வம்சாவழிப் பாரம்பரியம் உரியமுறையில் அடையாளம் காணப்படவேண்டிய பொறுப்பு வரலாற்றாசிரியர்களுக்கு உண்டு.

இலங்கைத்தீவில் வாழ்ந்து, இம்மண்ணில் பண்பாட்டுநிறுவனங்களைத் தோற்றுவித்த நாகர்வம்சத் திராவிடர்களை மிகவும் தந்திரோபாயமாக "அந்நியர்களாக" அதாவது இலங்கைக்கு வெளியே இருந்து வந்த படை யெடுப்பாளர்களாகவும், மரக்கலத்தில் வருகை தந்த நவிகர வணிகர்களாகவும், சிங்கள மன்னர் பாரம்பரியத்தினைக் குழப்பியவர் களாகவும் உத்தியோகபூர்வமற்ற வகையில் இலங்கைக்கு வருகை தந்தவர்களாகவும் மகாவம்சத்தில் திரிபுபடுத்திக் கூறப் பட்டதற்கான காரணங்கள் யாவை? சேனன், குட்டிகன் வரலாறு இவ்வாறு கூறப்பட்டதற்கான தேவை ஏன் ஏற்பட்டது? இந்த இரு மன்னர்களும் அனுராதபுரத்தில் 22 வருடங்கள் மொத்தமாக ஆட்சி புரிந்திருப்பது தற்செயலான ஒரு நிகழ்வு என்றே மகாவம்சம் குறிப்பிடுவதற்கான காரணங்கள் யாவை? இம்மன்னர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நீரியல் நிறுவனங்கள் எல்லாம் எங்கே? 44 வருடங்கள் ஆட்சிபுரிந்த எல்லாளனது கல்வெட்டுக்கள் எல்லாம் எங்கே? அம்மன்னது சாதனைப்பட்டியலை மகாவம்சம் ஏன் மறைத்துவிட்டது? இவ்வாறெல்லாம் கேள்விகளை தொடுத்துக் கொண்டு செல்லும் போது இலங்கையில் முற்பட்ட அனுராதபுர காலப்பரப்பில் நாகவம்சமரபினரது மேலாதிக்கம் மற்றும் அரசியல் எழுச்சி பற்றிய மறைக்கப்பட்ட தகவல்களும், வம்சத்தின் தொடர்ச்சியான இருப்புப் பற்றிய செய்திகளும் அவற்றின் பின்னணியில் உருவாகியிருந்திருக்கக்கூடிய பண்பாட்டுத்துறை யம்சங்களும் வரலாற்று வெளிச்சத்திற்கு தானாகவே வெளிப்படும் என்பது யதார்த்தமாகும். அந்த அடிப்படையில் முதலாவதாக நாகர்வம்ச மரபினைச் சேர்ந்த மூத்த சிவனின் மகனான அசேலன் என்பவனை சிங்களவம்ச இனத்தோடு இணைத்துக் காட்டுவதற்கு மகாவம்சவத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளமை. இரண்டாவதாக எல்லாளனை

சோழநாட்டு இளவரசனாக எடுத்துக்காட்டியிருப்பது. இந்த இரண்டு விடயங்களுமே வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட முடியாத வகையில் ஆதாரங்கள் கிடைக்க முடியாத வகையில், அவற்றை இன்னொரு வம்ச உரித்துக்குரியதாக மாற்றுவிக்கப்பட்டு விட்டமையை மகாவம் சத்தினூடாகக் காண்கின்றோம். ஈழராஜா என்ற திராவிடப்பதம் எவ்வாறு "எலாரா" என பாளிமொழியில் திரிபுபடுத்தப்பட்டதோ அதே போன்றே முன்னீஸ்வரம் என்ற அனுராதபுரத்தில் காணப்பட்ட மிகப்பழைய புராதன ஈஸ்வரர் கோவிலும் காலப்போக்கில் "இசுருமுனி" விகார என ஆக்கப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். திராவிடவம்சப்பெயர் மரபுகள் பாளிமொழியூடாக சிங்கள வம்சப்பாரம்பரியத்தினோடு கால ஓட்டத்தில் இணைக்கப்பட்டுவிட்ட வரலாற்றினை Fr.சேவையர் மிகவும் விரிவாக ஆராய்ந்து ஒரு நூலையே எழுதியுள்ளார்.[23]

## நாகர்கள் - குளச்சொந்தக்காரர்கள்

நீர்வள நாகரிகமொன்றின் தோற்றத்திற்கு அடிப்படையை இட்டுக்கொண்டிருந்த பெருங்கற்கால பெருமக்கள் சமூகத்திலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குழுமமாக மாறியிருந்த ஒரு பிரிவினர், மத்தியதரைக்கடற் பிராந்தியங்களின்றும், ஆசியமைனரிலிருந்தம் வணிகர்களாக வருகை தந்தவர்களோடு கலந்து நாகவம்வத்தினராக உருவாக்கம் பெற்றுக் கொண்டனர். இவர்கள் பேசிய வணிகமொழியும் எழுத்தும் கிரேக்க மொழியுடனும், பேர்சிய - ஸசானியர்களுடைய வரிவடிவங்களுடனும் கலந்து தனித்துவமான மொழி – மற்றும் வரிவடிவ வழக்காறுகள் உருவாவதற்கு வழிசமைத்தன. ஸசானியவம்சத்தினரின் தோற்றம், வளர்ச்சி மற்றும் குஷானிய வம்சத்தினரின் பேரரச நடவடிக்கைகள் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்ட வகையில் நாகர் குலமுறைகளுடனும் வாணிப நோக்கில் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்தைக் காண்கின்றோம். ஸஸானியர்களுடைய புராதன வரிவடிவப் பாரம்பரியம் ஒன்று பெருங்கற்கால "கிராபிடிக் குறியிடுகள்" என்ற பெயரில் தென்னிந்தியா - இலங்கை மட்பாண்டங் களில் பதியப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். அனுராதபுரத் திலுள்ள சீகிரிய நாகபடக் குகையினுள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கிடைத்த அணிகலன்கள், மட்பண்டங்கள், மற்றும் சுடுமண்பாவைகளின் முகத்தோற்றங்கள் என்பன ஸசானியக் கலைச்செல்வாக்கினை எடுத்துக்

காட்டுவதாகத் தற்போது தொல்லியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பண்பாட்டுப் பின்னணியில் உருவான நாகர் வம்சகுலமுறையினரே நீர்ப்பாசனக்குளங்களை உருவாக்கி, நீர்வள நாகரிகமொன்றின் தோற்றம் அதன் வளர்ச்சிக்கு அடித்தளமமைத்துக் கொடுத்தார்கள். குளக்கட்டின் உறுதிக்கும், குளத்து நீரின் செழுமைக்கும் பொறுப்பாக நாகபால உருவங்கள், கணபதி உருவங்கள் போன்றவற்றை உருவாக்கி, நாகர் சமூகத்தின் விருத்திக்கும், பாதுகாப்பு மற்றும் நிலைபேறிற்காக Annimism இணைந்திருந்த ஒரு வகையான தெய்வக் கோட்பாட்டியலை உருவாக்கி, பௌத்தத்திற்கு முன்னரான ஈழத்தின் சமய வரலாற்றிற்கு அவர்கள் பங்களித்திருந்தனர்.

## நாகர்வம்சத்தவர்களது குறியீடு – எருது.

நாகர் அரசமரபானது படுத்திருக்கும் எருது அல்லது நிற்கின்ற ரிஷப வடிவத்தினையே குறியீடாகக் கொண்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. கந்தரோடையிலிருந்து மூன்று வகையில் ரிஷபக் குறியீடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. முதலாவது கந்தரோடையிலிருந்து சேகரிக்கப்படும் பல்வேறு வகையான மணிவகைகளுள் (Various Beads) சந்திர காந்தக்கல் ஒன்றில் செதுக்கப்பட்டுக் கிடைத்துள்ள குத்து விளக்குடன் கூடிய படுத்திருக்கும் சேதுவடிவம் இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இச்சந்திரகாந்தக் கல் ஒரு மோதிரத்தில் இலச்சனையாக பதிக்கப்பட்டிருந்து உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும். கந்தரோடைப் பிராந்தியத்தில் உள்ள அரசமாளிகைத் திடலிலே இக்குறிப்பிட்ட அரசமுத்திரையான எருது இலச்சினை கிடைக்கப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பதவியாவில் கிடைத்த இலச்சினையைப் போன்று ஆனால் காலத்தால் முற்பட்டதாக இச்சந்திரகாந்தக் கல்லில் செதுக்கப்பட்ட எருது இலச்சினை விளங்குகின்றது). பெருங்கற்காலப் பண்பாட்டின் மிகஉச்ச வளர்ச்சியில் உருவான ஓர் அரசமரபுடன் தொடர்புபட்டதாகவே நாகர் வம்ச அரசமுறை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்டது என்பது வரலாற்றாசிரியர்களின் பொதுவான அபிப்பிராயமாகும். அந்த வகையில் திட்டவட்டமான நாகவம்ச அரச பாரம்பரியத்துடன் இணைத்துப் பார்ப்பதற்கேற்ற வகையில் பல்வேறு தொல்லியல் எச்சங்களுடன் இம்முத்திரை மோதிரக்கல் கிடைத்திருப்பது

வம்ச வரலாற்றிற்கும் அப்பால் கந்தரோடையுடன் மதஅடிப்படையில் நாகரை தொடர்புபடுத்தக் கூடிய வகையில் கிடைத்த இம்முத்திரைச் சின்னம் காணப்படுகின்றது எனலாம்.

மற்றுமொரு தொல்லியல் மூலாதாரமாக அகழ்வினூடாக கந்தரோடையிலிருந்து கிடைத்துள்ள அரும்பொருள் எருத்துருவம் வரையப்பட்டுக் கிடைத்துள்ள எலும்பினாலான கத்தி போன்ற ஒரு கருவியாகும். இக்கருவியின் இரு விளிம்புகளில் ஒரு பக்கம் கத்தி போன்ற கூர்மையான இயல்பினையுடையதாகக் காணப்படுகின்றது. ஒன்றரை அங்குலமான அதன் ஒரு பக்கப்பரப்பில் நீண்ட எருத்து வடிவம் ஒன்று வரையப்பட்டுள்ளது. வரையப்பட்ட இவ்வெருத்தின் தோற்றமானது மத்திய தரைக்கடலில் உள்ள கிரீட்டன் தீவில் காணப்படும் நோஸஸ் நகரில் வரையப்பட்ட எருத்தின் வடிவத்தையொத்துக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. 1995 இல் கந்தரோடையில் உச்சாப்பனை என்ற இடத்தில் மேற்கொண்ட அகழ்வின் போதே இவ் வரும் பொருள் கிடைக்கப்பெற்றது. வரலாற்றுக்கு முற்பட்ட கால கட்டத்திற்குரியதாகக் கருதப்படும் இத்தொல்லியல் எச்சமானது பண்பாட்டடிப்படையில் நாகர் மரபினரின் தோற்றத்தினைக் கண்டுகொள்வதற்கும் உதவும் ஒரு வரலாற்று மூலமாகப் பயன்படுத்த முடியும். இத்தகைய ஒருவரைப்பு மரபு கந்தரோடையில்இன்றும் தொடர்வதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது பசுமாடுகளுக்கு குறி சுடும் மரபில் காணப்படும் ஒரு குறியீடான சேதுவடிவமேயாகும். யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்து சேது நாணய வெளியீட்டில் காணப்படும் அதே வடிவத்தினை இற்றைவரைக்கும் கந்தரோடையில் உள்ள நெல்வயற் செய்கையாளர்கள் தத்தமது பட்டிகளுக்கு (மாடுகளுக்கு) குறி சுடுவதனூடாகப் பேணி வருவதனை இக்கட்டுயைாசிரியர் (Eye witness) நேரடியாகவே கண்டுள்ளார். இவ்வாறான தொல்லியல் மற்றும் பண்பாட்டு மானிட வியற்சான்றுகளின் அடிப்படையில் நாகர்வம்சப் பாரம்பரியப் பின்னணியில் நாகரதும் அம்மக்கட் கூட்டத்தின் அரச இலச்சினையாக சேது வடிவம் இலங்கையில் பேணப்பட்டு வந்திருந்தமையைக் காண்கின்றோம். இப்பின்னணியில் நாகர்வம்சத்தினரது ஆட்சிக்காலத்தில் இந்துசமயப் பண்பாட்டில் அவர்களுக்கிருந்த தொடர்புகள் மிகத் தெளிவாக – துல்லியமாக வெளித்தெரிவதனைக் காண்கின்றோம். சிவ வழிபாடே அவ்வம்சத்தினரின் மிகப் பிரதானமான சமயவெளிப்பாடாக அமைந்திருந்தது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. சதுரமான

செம்பு நாணயமொன்றில் “சிவ” என்ற வாசகம் தமிழ்ப்பிராமி வரிவடிவில் பொறித்திருக்கக் கண்டெடுக்கப்பட்ட நிகழ்வு 1995 இல் கந்தரோடை அகழ்வின் போது ஏற்பட்டது. இந்த நாணயம் நாகமன்னன் ஒருவனால் வெளியிடப்பட்டது என்பதும் தற்போது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கந்தரோடையைத் தலைநகராகக் கொண்ட நாகர் வம்சத்தினர் நாகதுவீபத்தில் சிவவழிபாட்டு மரபுகளையே வளர்த்தெடுத்திருந்தனர் என்ற தெளிவான முடிபினை கண்டு கொள்ள முடிகிறது.[24]

## நாகதுவீபமும் சிவன் வழிபாட்டு மரபும்

ஈழத்துப் புராதன பஞ்ச ஈஸ்வரங்கள் என வரலாற்றுப் புகழ்பெற்ற சிவன் கோவில்களுள் இரண்டு நாகதுவீபத்தின் கண் அமைந்திருப்பதனைக் காணலாம். நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் என்றழைக்கப் பட்ட கோவில்களே அவையாகும். தொண்டேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் தொடர்பாக, அதன் அமைவிடம் தொடர்பாக வரலாற்றிஞர் மத்தியில் கருத்தொருமைப்பாடு நிலவவில்லை. இந்த ஈஸ்வரன் கோவில் தென்முனையில் தென்னிலங்கையிலுள்ள தொந்திரா அல்லது தேவேந்திர முனையில் அமைந்திருப்பதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். நாகதுவீபத்தில் பழமையான மேலும் சில ஈஸ்வரன் கோயில்கள் அமைந்திருந்தமையை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலையில் திருத்தம்பலேஸ்வரம் என்றொரு கோவிலும், யாழ்ப்பாண வைபவத்தில் ஐம்பு நாதேஸ்வரமும் குறிக்கப் படுவதனைக் காண்கின்றோம். சந்திரமௌலீஸர் என்றொரு பழம்பெரும் ஈஸ்வரன் கோவில், சாவகச்சேரிக்கண்மையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுவர். சிலர் இக்கோயிலை வல்லிபுரத்திற்கு அண்மையலுள்ள ஆணைவிழுந்தான் சந்திக்கண்மையில் அமைந்திருந்ததாகவும் குறிப்பிடு கின்றனர். வாரிவன நாதேஸ்வரர், சட்டநாதேஸ்வரர், கல்வத்தையிலுள்ள சிவன் கோயில் என வரலாற்றுப்பழமை மிக்க சிவன் கோவில்களும் நாகதுவீபத்தில் காணப்படுகின்றன. இவை சோழர்காலத்துக் கோயில்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்பொழுது நாகர்களுக் கேயுரித்தான மிகப் பழமையான சிவன் கோவில் ஒன்றின் பெயர் தேவார முதலிகளது பாடல்களிலிருந்து யாழ்ப்பாணத்துக் கேயுரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கோவிலின் பெயர் மணிநாகேச்சுரம் என்பதாகும். மணிநாக ஈஸ்வரம் என்ற பெயரே

மணிநாகேச்சுரம் என மருவிய நிலையில் இன்றும் வழிபடப்பெற்று வரப்படுவதனைக் காணலாம்.

நாவலந்தீவு பற்றிய குறிப்புக்கள் காலத்திற்கு காலம் ஒரே பொருளில் வழங்கப்பட்டிருக்கவில்லை. குமரிக் கண்டத்தின் தென்பகுதியிலேயே நாவலந்தீவு அமையயப் பெற்றிருந்தமைக்கான குறிப்புக்கள் மணிமேகலை – சிலப்பதிகாரம் ஆகிய இரட்டைக் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன. ஒரு காலகட்டத்தில் இந்திய உபகண்டம் முழுவதனையும் 'நாவலந்தீவு' குறிப்பிட்டு நன்றதற்கான இலக்கியக் குறிப்புக்களும் காணப்படுகின்றன. குமரிக்கண்டத்தின் தென்பகுதியில் நாவலந்தீவு மற்றும் சப்ததீவுகளும் அமைந்திருந்தன எனவும் கடல் கோளினால் குமரிக்கண்டம் நீரில் அமிழ்ந்துபோக, நாவலந்தீவும், சப்ததீவுகளும் மட்டுமே இன்று எஞ்சியுள்ளன எனவும் அவையே இலங்கைத்தீவும், வடபகுதியிலுள்ள தீவுக்கூட்டங்களுமாகும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அப்பர் சுவாமிகளினால் பாடப்பட்ட மணிநாகேச்சரம் இலங்கையின் வட பகுதியில் உள்ள சப்ததீவுகளுள் ஒன்றான நயினார் தீவிலேயே அமைந்துள்ளது என்று கருதும் ஆய்வாளருமுளர். மணிமேகலையில் இடம் பெற்றுள்ள குறிப்பொன்றின்படி நாவலந்தீவிலுள்ள சிந்தாதேவியின் படம் சிந்தாமணிப்பீடம் எனவும் மணிகேலா தெய்வம் வந்துறைந்த பீடம் (சக்திபீடம்) இதுவே எனவும் இதுவே இன்று நாகேஸ்வரியின் சக்திபீடமாக காட்சியளிக்கின்றது எனக் கருதும் ஆய்வளரும் உளர். சிந்தாதேவியிடமிருந்து கிடைத்த 'அக்ஸயபாத்திரம்' ஆபுத்திரன் கையிற்கு கிடைத்த தன்மையும், பின்னர் அமுதசுரபியில் அப்பாத்திரம் ஜலசமாதியுற்ற வரலாறும் மணிமேகலையில் மிகவிரிவாக்க கூறப்பட்டுள்ளமையை நாம் அறிவோம். இப்பின்னணியிலே நாகர் வம்சத்தினர் நாவலந் தீவிலும், சப்தத்தீவுகளிலும் ஓர் அரச பாரம்பரியத்தினை உருவாக்கியிருந்தனர் என்பதும் அதன் தலை நகராக கதிரமலை (கந்தரோடை) விளங்கியிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இவ் வடிப்படையில் நோக்கும் போது மணி நாகேச்சரம் அமைந்த நிலையம் நயினார் தீவு என்பதில் சந்தேகம் எழமுடியாது. மணிபல்லவம், மணித்துவீபம், மணிப்பீடம், மணிநாகதுவீபம், மணியக்க என்றெல்லாம் பல்வேறு பெயர்களில் 'மணி' இணைந்து பேசப்படுகின்ற ஒரு வரலாறு தற்போது நயினார் தீவிற்குரியதாகவே பெரும்பாலாரினால் கருதப்பமுடுகின்ற நிலையில், மணிநாகேச்சரம் என்ற பாடல் பெற்ற

நாகவம்சத்தினுடைய சிவத்தலம் சப்ததத்தீவுகளில் ஒன்றாகிய நயினார் தீவில் அமைந்திருந்தது என்ற முடிவுக்கு வரலாம். எனினும் இன்று மணிநாகேஸ்வரியாக சிவவழிபாடு, நாகவழிபாடு, அம்மன் வழிபாடு இவை மூன்றும் ஒருமித்த வகையில் எவ்வாறு ஒரு சக்திபீடம் இங்கு உருவானது என்பது மேலும் ஆராயத்தக்கது. நாகரும், பாணரும், திரையரும் வம்ச ஆட்சியாளர்களாக எழுச்சி பெற்றமையின் பின்னணியில் அம் மூன்று வழிபாட்டு மரபுகளும் ஒரே சந்நிதியில் சங்கமமாயிருத்தல் வேண்டும். எனக் கொள்வதே பொருத்தமாகும்.

## நாகரும் வைஷ்ணவ மரபும்

இலங்கைத் தீவினைப் பொறுத்த வரையில் நாகவம்ச பண்பாட்டுச் செல்வாக்குகள் பௌத்த மரபில் வைஷ்ணவப் பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்டே சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் வெளிப்படத்தப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். மகியங்கணை ஓவியங்களிலும், களனிவிகாரை ஓவியங்களிலும் நாகவம்ச மரபுகள் யாவும் வைணவப்பண்பாட்டுக்குரியதாக (உபுல்வணன் மரபிற்குரியதாக) சித்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சிகிரியாவில் மாத்திரம் நாகபடக்குகையினுள் வரையப்பட்ட ஓவியச்சிறையில் நாக மரபு தனித்துவமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.) இலங்கையின் காவல் தெய்வமாக விஷ்ணு கருதப்பட்ட நிலையில் பௌத்த மரபுகளில் நாகரை அமானுஸ்ய சக்தி படைத்த தேவர் குலம் போன்ற ஒரு பிரிவினராக சித்தரித்த மரபினை பௌத்த இலக்கியங்களிலும் பௌத்த ஓவியங்களிலும் காண்கின்றோம். ஆனால் ஈழத்து சாசனச் சான்றுகளினூடாக ஆராயும் போது நாகவம்சத்தினர் பௌத்தத்திற்கு முந்திய இலங்கையின் வம்ச அட்சியாளர்களாக விளங்கியிருந்தமையும், சிவவழிபாட்டிற்குரியவர்களாக அவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனையும் தெளிவாக அறியமுடிகின்றது. தீசனது ஆட்சியின் போது அனுராதபுரம் இந்து மதத்திற்குரிய தலை நகரமாகவே இலங்கையில் விளங்கியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பௌத்தத்தின் வருகையின் பின்னரேயே தேவானம்பியதீசன் இந்து சமயத்திற்குரிய ஆதரவினைக் கைவிட்ட போதிலும் நாகவம்சத்தினரான அவனது முன்னோர் வளர்த்தெடுத்த இந்துசமய நிறுவனங்கள் அனுராதபுர கால இலங்கையில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த வகையை கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. பௌத்த கட்டிட சிற்பக்

கலை மரபுகளுடன் நாகர் வம்சத்தினரின் கலைக்கோலங்கள் இணைக்கப்பட்டு ஸ்தூபிக்கட்டிடக் கலைப் பாரம் பரியமாக அவை மாற்றப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். நாகதுவாரபாலகர் வடிவங்கள் அவ்வாறு இணைந்து கொண்டமைக்கான சிறப்புதாரணமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நாகரும் வேல் வழிபாட்டு மரபும்

ஈழத்த இந்து வழிபாட்டு மரபுகளில் வேல் வழிபாட்டு முறை இற்றைவரைக்கும் மிக ஆழமான முறையில் வேரூன்றியிருப்பதனைக் காணலாம். கதிர்காமம் அன்றைய காலகட்டத்தில் வகித்திருந்த பண்பாட்டு நிலையில் கந்தபுராண கலாசாரம் இலங்கையில் வேர்விட்டுக் கிளைத்திருந்தது என்பதும், நாகர் வம்சமரபினர் அதன் பின்னணியில் இருந்து அப்பண்பாட்டை வளர்த்தெடுத்திருந்தனர் என்பதும் தற்போது தெளிவாகின்றது. பெருங்கற்கால முதுமக்கட்தாழிகளுக்குள் வைக்கப் பட்டுக்கிடைத்த இரும்பினாலான வேல் கருவியிலிருந்து அவ்வழிபாட்டு மரபானது கதிர்காமத்திலிருந்து செல்வச்சந்நிதி வரைக்கும் வாழ்ந்த மக்களால் பின்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அம்முருக வழிபாட்டு மரபு இன்று வரை வடஇலங்கையில் உயிரோட்டமாக இருந்து கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். அன்றைய அமுதசுரபிக்குள் அமிழ்ந்து போன அக்ஸய பாத்திரம் இன்று ‘அன்னக்கந்தராக’ கதிர்காமத்திலும் செல்வச்சந்நிதியிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் மரபு நாகவம்ச மரபு என்று கூறினால் அது மிகையாகாது. இப்பின்னணியில் இலங்கையில் நாக வம்சத்தினரின் சமயப் பங்களிப்பினை மேலும் ஆராய்ந்து செல்வதற்கு இடமுண்டு.

## நாகர் இனமக்கள் வளர்த்தெடுத்த கணபதி வழிபாட்டு மரபுகள்

வரலாற்று உதயகாலம் விஜயனின் இலங்கை வரவுடன் (நூல் நூற்றலுடன்) ஆரம்பிக்கின்றது. மகாவம்சத்தில் நாகதீப என்பது தமிழ் நூல்கள் கூறும் நாகநாடாகும். நாகதீப அரசர்களது சண்டையை அடக்க புத்தபிரான் இரண்டாவது தடவையாக நாகதீபம் வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. கந்தரோடையிலிருந்து அகழ்வின்போது மீட்டெடுக்கப்பட்ட மூன்று சுடுமண்விநாயகர் சிற்பங்கள் இக்கட்டத்தில் எமக்கு மிகமுக்கியமான சான்றாக உள்ளன. நூல் நூற்றல் தொழிற்தேர்ச்சியில்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராசா கடந்த 34 வருடங்களாக இதே பல்கலைக் கழகத்திலேயே வரலாற்றுத் துறையில் கற்பித்துக் கொண்டு வருகின்ற ஓர் அனுபவம் மிக்க ஆசிரியராவார்.

இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகமாக 1974இல் உருவாக்கம் பெற்றபோது ஒரு மாணவனாக இணைந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்ற இவர் பேராசிரியர்களான கா.இந்திரபாலா, கா.கைலாசபதி, சீலன் கதிர்காமர், வி.சிவசாமி, ச.சத்தியசீலன் போன்ற துறைசார்ந்த புலமையாளர்களிடம் தன் அறிவுவிருத்திக்கான வழிகாட்டுதல்களை ஈட்டிக்கொண்டார். புராதன-மத்தியகாலத் தென்னாசியத் தொல்லியல், மற்றும் கட்டிட-சிற்பக்கலைகள், தென்னாசியச் சாசனவியல், நாணயவியல் போன்ற பண்பாட்டுத்துறைகளில் மைசூர்ப் பல்கலைக்கழகத்திலும், விஸ்வபாரதி-சாந்திநிகேதனத்திலும், பாண்டிச்சேரியிலுள்ள French நிறுவனத்திலும் பயிற்சிகளைப் பெற்றுவந்து, தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிக்கொண்டு வருகின்றார். தொல்லியல் சார்ந்தும், வரலாறு சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் பல ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ள பேராசிரியர் செ.கிருஸ்ணராசா இலங்கையில் வெண்கலச்சிற்பக்கலை மரபுகள், இலங்கைப்பண்பாட்டு வரலாற்றின் பரிணாம வரலாறு. தொல்லியலும் யாழ்ப்பாணத்துத் தமிழரது பண்பாட்டுத் தொன்மமும் என்பன போன்ற நூல்களின் ஆசிரியருமாவார்.